Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஸூ சித்திரை மீ 27-ம் உ | திங்கட்கிழமை | (09 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 12 | ஓசை 50

## ஒரிஸா தமிழ்க் குழு அகதிகள் வெளியே செல்லலாம்; போகுமிடம் தெரியவேண்டும்!

(புவனேஸ்வர்)

ஒரிஸா மாநிலத்தில் கொரக்பூர் பகுதியில் இப்போது தங்கியிருக்கும் இலங்கையிலிருந்து தப்பி அகதிகளாகச் சென்ற தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்களும் ஆதரவாளர்களும் சொந்த விருப்பத்தின் பேரில் இங்கிருந்து செல்ல விரும்பினால் அவர்களைப் போக விடும்படி ஒரிஸா மாநில அரசை மத்திய அரசு கேட்டுள்ளது.

இதேசமயம் இந்த அகதிமுகாமிலிருந்து சொந்த விருப்பத்தின் பேரில் வெளியேறிச் செல்பவர்கள் எங்கே போகிறார்களென்பதை அறிந்து கொள்ளவேண்டியதும் மாநில அரசின் பொறுப்பென்றும் மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. பிற மாநிலங்களுக்கு இவர்கள் சென்றால் அந்த மாநிலங்களுக்கு ஒரிஸா மாநில அரசே அறிவிக்கவேண்டுமாம்.

# தமிழ்க்குழு அகதிகளுக்கு கேரளத்தில் ஓர் அங்குல இடம் கூடக் கிடையாது என்கிறார் முதல்வர் நாயனார்

(புதுடில்லி)

இலங்கைத் தமிழ்க்குழு அகதிகளுக்கு கேரள மாநிலத்தில் ஓர் அங்குல நிலத்தில் சிறிது நேரம் கூடத் தங்கியிருப்பதற்கு அனுமதியளிப்பதற்குத் தாம் தயாராக இல்லையென்று கேரள மாநில முதலமைச்சர் ஈ. கே. நாயனார் நேற்றுத் திட்டவட்டமாக தெரிவித்தார்.

ஒரிஸாவில் எங்களை அடைத்துவைத்துக் கஷ்டப்படுத்துவதைவிட கேரள மாநிலத்திலாவது நாங்கள் போய்த் தங்கியிருப்பதற்கு அனுமதி கொடுத்து வசதி செய்துதருமாறு ஈ. என். டி. எல். எவ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இந்திய மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்தக் கோரிக்கை பற்றி கேரள முதல்வர் ஈ. கே. நாயனார் டில்லி வந்திருந்தபோது கேட்கப்பட்டது. இதற்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு ''ஓர் அங்குல நிலத்தில் கூட இலங்கைத் தமிழ்க் குழு அகதிகளுக்கு இடம் கொடுக்க முடியாது'' என்று கூறினார்.

கேரள மாநிலம் ஜனத்தொகை அடர்த்தி நிறைந்தது. இங்குள்ள மக்களுக்கே வாழ்வதற்கு இடமில்லாமலிருக்கிறது. இந்நிலையில் இலங்கைத் தமிழ்க் குழு அகதிகளுக்கு எப்படி இடமளிக்க முடியும் என்றும் நாயனார் கேட்டார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு கொழும்பில் உயிர் கொடுக்க முயற்சி!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணசபை தானாகவே கலைந்து போவதைத் தடுக்கும் வகையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மேற்படி மாகாணசபையின் கூட்டத்தைக் கொழும்பில் நடாத்த உத்தேசித்துள்ளது.

அதேவேளை மாகாணசபை மூன்று மாதத்துக்கு ஒருமுறையாவது கூடாவிடில், சட்டப்படி அது கலைந்ததாகக் கருதப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

### பிரேமாத்மானந்தஜி காலமானார்

(பம்பாய்)

பல்லாண்டுகள் வெள்ளவத்தையில் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் பொறுப்பாளராக இருந்த சுவாமி பிரேமாத்மானந்தஜி நேற்று முன்தினமிரவு பம்பாயில் காலமானார். சிறிது காலமாகவே நோய்வாய்ப்பட்டிருந்த சுவாமி பிரேமாத்மானந்தஜி யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடியைப் பிறப்பிடமாகக்கொண்டவரென்பது குறிப்பிடத்தக்கது.

### க. பொ. த. சாதாரண விடைத் தாள்கள் திருத்த வேலைகள்

தற்பொழுது நடைபெற்று முடிந்த க. பொ. த. (சாதாரணம்) பரீட்சைக்குரிய விடைத்தாள்களைத்திருத்தும் வேலைகள் இம்மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள 5 கல்லூரிகள் விடைத்தாள்

## அரசு - புலிகள் இன்றைய பேச்சு மாகாணசபை கலைப்பு; தேர்தல்!

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணசபை கலைப்பு, புதிய தேர்தல், வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள இராணுவ கடற்படை, விமானப்படை முகாம்கள் பற்றிய முக்கிய பிரச்சினைகள் இன்றிரவு கொழும்பில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் விவாதிக்கப்பட விருப்பதாக நம்பப்படுகிறது.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா) செயலாளர் நாயகம் யோகரத்தினம் யோகி, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் இன்று நண்பகல் கொழும்புக்குப் பயணமாவார்கள். கடந்த ஏழாந்தேதி நடைபெறுவதாக இருந்த இப்பேச்சுவார்

(8ஆம் பக்கம் பார்க்க)

தேசித்துள்ளது.

**அதேவேளை மாகாணசபை மூன்று மாதத்துக்கு ஒருமுறையாவது கூடாவிடில், சட்டப்படி அது கலைந்ததாகக் கருதப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.**

73 உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சபைக் கூட்டத்தின் கோரம் 25 உறுப்பினர்கள் என்பதால் 17 மாகாணசபை உறுப்பினர்களைக் கொண்ட முஸ்லிம் காங்கிரசின் ஆதரவைப் பெறுவதிலும் ஈ. பி. ஆர். எல். எவ். முயற்சிகளை மேற்கொண்டு வருகிறதாம்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் நிலையை ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபாவுக்கு விளக்குவதற்காக சமீபத்தில் மாகாண சபையின் சபாநாயகர் பொன் ராஜகாரியர் தமிழ்நாடு சென்று திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது இந்தியாவில் தங்கியிருக்கும் வடக்கு-கிழக்கு மாகாணசபை மந்திரிகள் மாகாணசபை கூட்டத்தில் கலந்து கொள்ளக் கொழும்பு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை கூட்டம் தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை எனறும், ஆனால் கூட்டம் வெகு விரைவில் கொழும்பில் இடம் பெறும் என்று ஈ. பி. ஆர். எல். எவ். பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். தான் கூட்டத்தில் கலந்து கொள்வதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்தி விடமுடியாது என வடக்கு-

(8ஆம் பக்கம் பார்க்க)

விடைத்தாள்களைத்திருத்தும் வேலைகள் இம்மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள 5 கல்லூரிகள் விடைத்தாள்களை பார்வையிடும் நிலையங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (52)

மட்டக்களப்பில்

## 16 மைல் மரதன் ஓட்டப் போட்டி

மட்டக் களப்பு)

அன்னை பூபதி நினைவாக நேற்று மட்டக்களப்பில் பதினாறு மைல் மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றது. கிரான் சந்தியில் ஆரம்பமான இப்போட்டி ''ட்டக்களப்பு வெபர் மைதானத்தில் முடிவ

(8ஆம் பக்கம் பார்க்க)

விவாதிக்கப்பட விருப்பதாக நம்பப்படுகிறது.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா) செயலாளர் நாயகம் யோகரத்தினம் யோகி, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் இன்று நண்பகல் கொழும்புக்குப் பயணமாவார்கள். கடந்த ஏழாந்தேதி நடைபெறுவதாக இருந்த இப்பேச்சுவார்

(8ஆம பக்கம பார்க்க)

# எமது போராட்டத்திற்கு ஒரு சில எழுத்தாளர்களே பங்களித்தனர்

(புத்தூர்)

''இந்தியாவிலே புரட்சிக் கவிதைகள் பாடியவர் பாரதியார், அவர் புரட்சிக் கருத்துக்களை மக்கள்முன் வைத்தார். அந்த வகையிலே எமது ஈழப் போராட்டத்தில் எத்தனை எழுத்தாளர்கள் தங்களது பங்களிப்பை எமது போராட்டத்திற்குச் செய்தார்கள் என நாம் பார்க்கும்பொழுது விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே எனத் தெரிகின்றது.'' இவ்வாறு நேற்று புத்தூர் கிழக்கு மாவீரர் மண்டபத்தில் மறைந்த தேசாபிமானி திரு. திருஞானசேகரம் அவர்களின் ''புதியதோர் உலகம் செய்வோம்'' நூல் வெளியீட்டு வைபவத்தில் தலைமை வகித்த வலிகாமம் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி வானதி இவ்வாறு தெரிவித்தார்.

இக்கவிதைத் தொகுப்பின் ஆய்வுரையினை கவிஞர் திரு.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் இன்சுலின் தட்டுப்பாடு நீங்கி வருகின்றது

(யாழ்ப்பாணம்)

இன்சுலின் மருந்துக்கு யாழ்ப்பாணத்தில் தட்டுப்பாடு நீங்கிவருவதாக யாழ். மருந்துக்கடைகள் சங்கத் தலைவர் திரு. சி. கிறிகணேசன் ஈழநாதத்துக்கு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்சுலின் மருந்து 250 ரூபா முதல் 300 ரூபா வரையில் தனியார் கடைகளில் விற்கப்படுகிறது. ஆனால் இங்கே 181 ரூபா 70 சதமாக அது விற்கப்படுகிறது எனவும் அவர் சொன்னார்.

யாழ்ப்பாணத்திலுள்ள மருந்துக்கடைகளிடையே போட்டிகள் நிலவுகிறதால் மருந்துக்

(8ஆம் பக்கம் பார்க்க)

பரந்தன்

# இரசாயனத் தொழிற்சாலையை மூட ஒருபோதும் அனுமதியோம்

(கிளிநொச்சி)

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மூடிவிட நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

ஜனாதிபதியைச் சந்தித்து உடனடியாக இத் தொழிற்சாலையை இயங்கச் செய்ய ஆவன செய்வோம்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் சுரேஸ் பரந்தன் இரசாயனத் தொழிலாளர் தூதுக்குழுவி

(8ஆம் பக்கம் பார்க்க)

வட்டுக் கோட்டைத் தொகுதி

## டாக்டர்கள் இன்மையால் நோயாளிகள் அவதி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள ஆறு அரசாங்க ஆஸ்பத்திரிகளில நான்கு, நோயாளர் தங்கிச் சிகிச்சை பெறும் ஆஸ்பத்திரிகளாகும்.

இந்த நான்கிலும் (எம் பி. பி.எஸ்) டாக்டர்கள் இன்றி பொதுமக்கள் பெரும் கஷ்டங்

(8ஆம் பக்கம் பார்க்க)

# ரயில்சேவையை துரிதமாக்கவும் அமைச்சர் நடவடிக்கை

(கொழும்பு)

ரயில் சேவையை துரிதமாக்கவும், ஒருங்கிணைக்கவும் போக்குவரத்து அமைச்சர் விஜயபால மெண்டிஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

விரைவில் அதிசக்தி வாய்ந்த ரயில் சேவைகளை ஆரம்பிக்க இருப்பதாகவும், சிமேந்தினாலான கொங்கிரீட் சிலிப்பர் கட்டைகளை பொருத்த விருப்பதாகவும் ரயில்வே பகுதி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரயில் பாதைகள் பழுது

(8ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் விற்பனை நிலையங்களில் காணப்பட்ட எரிபொருள்!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதால் கலப்படம் செய்த எரிபொருளை தனியார் விற்பனையாளர் விற்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## மட். மினிபஸ் கட்டணம் குறைவு

(கல்லாறு)

கொழும்பு - மட்டக்களப்பு ரயில் சேவைகள் நடைபெறத் தொடங்கியிருப்பதால் கொழும்பு மட்டக்களப்பு மினிபஸ சேவையின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

முன்னர் நூறு ரூபாவாக அறவிடப்பட்ட கொழும்பு மட்டக்களப்பு கடடணம் தற்போது அறுபது ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

# சேவை நீடிப்பு பெறுவதற்கு கொழும்பு செல்ல வேண்டும்

(பண்டத்தரிப்பு)

இலங்கை மின்சார சபையில் சேவை நீடிப்பு வழங்குவதற்காக அதன ஊழியர்கள் இம்முறை கொழும்புக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர்

இதற்கு முன்னர் அந்தந்த பகுதி தலைவர்கள் மூலம் விண்ணப்பம் அனுப்பப்பட்டு வந்தது.

இம்முறை மட்டும் வழமைக்கு மாறாக கொழும்புக்கு இவர்கள் அழைக்கப்பட்டது குறித்து இந்த ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்

அத்துடன் இவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதமும் தனிச்சிங்களத்தில் இருந்தது டன் கொழும்பு போய்வர ரயில்வே ஆணைப்பத்திரமும் வழங்கப்படவில்லை.

விமான நிலையம்

## நஷ்ட ஈடு இல்லாமல் விஸ்தரிப்பு இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புவிமானநிலையத்தை விஸ்தரிப்பதற்கும், முள்வேலி போடுவதற்கும் அரசாங்கம் அனுமதிவழங்கியுள்ள போதும் அங்குள்ள மக்களுக்கு வாழ இடம் கொடுப்பதற்கு

(8ஆம பக்கம் பார்க்க)

COMMERCIAL BANK

கடந்த காலங்களில் பல இன்னல்களுக்கு மத்தியிலும் மகத்தான சேவையாற்றி மக்கள் மனதில் நிரந்தர இடத்தை வகிக்கும் இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளை எமது பாரம்பரியத்தைப் பேணும் வகையில் எதிர்வரும் புத்தாண்டு தினத்தன்று 14-04-1990 காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரை கூடும் சுபவேளையில் வாடிக்கையாளர்களுக்குப் பல புத்தாண்டுச் சலுகைகளையும், பரிசுகளையும் வழங்கவிருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

உங்கள் ஆதரவுடன் மேன்மேலும் எமது பணி தொடர அன்புடன் வருக வருகவென அழைக்கிறதுஉங்கள் இலங்கை வர்த்தக வங்கி.

முகாமையாளர்

(B.706)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

தனிச் சீனியில் அரைத்த ஐசிங் சுகர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
MGM. 777 K.K.S. Road Jaffna.

**மலிவு விலையில்**
J.V.C. GXN 70 வீடியோ கமறா, National G.1. ஜென்லொக் வீடியோ கமறா, Sunsui Vision mixer, 14'' National Colour T.V. ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். எவர்விஷன் 21, மணிக்கூட்டுவீதி யாழ்ப்பாணம். B. 747

யாழ் நகரில் சகலவிதமான மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள DiLKA WATCH WORKS, Opposite Bus Stand, Jaffna (குறிப்பு) சகல 'சீக்கோ' சிற்றிசன் உதிரிப்பாகங்களும் கையிருப்பில் உண்டு (B-537)

### தேவை

யாழ்நகரில் அமைந்துள்ள திருமணசேவை - ஏஜென்சி நிறுவனத்திற்கு கீழ்க்காணும் இடங்களிலிருந்து பிரதிநிதிகள் இலிகிதர்கள் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தேவை. எவரும் விண்ணப்பிக்கலாம். தகுதிவாய்ந்தவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.
1. கிளிநொச்சி 2. குருநகர் 3. நெல்லியடி 4. சாவகச்சேரி 5. வேலணை 6. முல்லைத்தீவு
முடிவு திகதி 18.4.90 விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: முகாமையாளர் இல. 79 யாழ் வீதி, வவுனியா. R/94

### சேவை

எம்மிடம் சகல சமயத்தையும் சேர்ந்த உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் உண்டு. நீங்கள் நேரடியாகவோ அல்லது கடித மூலமாகவோ தொடர்பு கொள்ளவும். மணப்பந்தல் இல. 79 யாழ் வீதி வவுனியா. R/95

லண்டன் Pitman Typing, Shorthand யூலை 90 பரீட்சைக்குத் தோற்ற விரும்புவர்கள் 14.04.90இற்கு முன்பு எம்மிடம் தொடர்பு கொள்ளவும், Bond Institutes 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். B. 751


## ரயில் முன் பாய்ந்து தற்கொலை

(கொழும்பு)
கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் இரவு புறப்பட்ட தபால் ரயில் முன்பாக ஒருவர் பாய்ந்து தற்கொலை செய்ததால் சுமார் ஒன்றரை மணி நேரம் தாமதமாகவே அந்த ரயில் யாழ்ப்பாணம் வந்தது.

அனுராதபுரத்துக்கு அருகில் இச்சம்பவம் நடைபெற்றது. இறந்தவர் தென்பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## விளையாட்டுப் போட்டியில் புலிக்கொடி ஏற்றப்பட்டது

(வண்ணார்பண்ணை)
நல்லூர் உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் வண்ணார்பண்ணைப் பகுதியில் நடந்த விளையாட்டுப் போட்டியில் மக்களின் வேண்டுகோளையடுத்து விளையாட்டின் ஆரம்பத்தில் புலிக்கொடி ஏற்றிவைக்கப்பட்டது. பலத்த கரகோசத்தின் மத்தியில் கிராம சேவையாளர் செ. சச்சிதானந்தன் இக்கொடியை ஏற்றி வைக்க நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் போட்டி ஆரம்பமானது. யாழ்ப்பாணப் பொறுப்பாளர் பொன் மாஸ்டர் மறைந்த தியாகிகளான லெப்டினன் கேணல் ராதா போராளிகளான இன்பம், கிறிஸ்டி, மாபி, மோகன் ஆகியோரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தியாகிகளின் நினைவாக இப்பகுதியில் இவ்விழாவை அதுவும் உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் நடத்துவது மிகவும் பாராட்டக்கூடியது. இவ்விழா இங்கு மட்டுமல்ல ஒவ்வொரு கிராமத்திலும் நடாத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் கூறுகையில் வீரத்தில் மட்டுமல்ல விளையாட்டுத்துறையிலும் நாம் சிறந்தவர்கள் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

ப. கணேசலிங்கம், கிராம சேவையாளர் வசந்தகுமார், மறைந்த லெப்டினன் கேணல் ராதாவின் தந்தை மு. கனகசபாபதி ஆகியோரும் உரைநிகழ்த்தினார்கள். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தியாகிகளின் நினைவாக அவர்களின் குடும்பத்தினரால் பரிசில்கள் வழங்கப்பட்டன. மு. கிருஷ்ணசாமி நன்றியுரை நிகழ்த்தினார்.

இவ்விளையாட்டுப் போட்டியில் வண்ணார்பண்ணை வடமேற்குப் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்கள் விளையாட்டு கழகங்கள் ஆகியன பங்குகொண்டு சிறப்பித்தன. (45)

## சுகாதார பயிற்சியாளருக்கு சான்றிதழ் வழங்குதல்

தெல்லிப்பழை சமூக சுகாதாரப் பயிற்சி நிலையத்திலிருந்து பயிற்சி முடித்து வெளியேறும் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம், இம்மாதம் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 30 மணிக்கு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.


கிராமிய சுகாதார உதவியாளர்கள் அறுபத்திரண்டு பேர், சுகாதார தரிசிப் பபளங்கள் [?] இருபத்தெட்டுப் பேர் இதில் சான்றிதழ்களைப் பெறுவார்கள்.

இவர்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள பல மாவட்டங்களிலிருந்து இந்தப் பயிற்சியாளர்கள் தெரிவாகியுள்ளனர்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
03. 06. 1970

தாயக மண்ணில்
08. 04. 1987



### சங்கர் (சுருளி)
மகாலிங்கம் விஜயராசா
(சாவற்கட்டு)

மண்ணினைக் காத்திட
மரணம் அடைந்த
[illegible]

விழி போல் தமிழ் மண்
காத்த வேங்கையே
[illegible]

## வடமராட்சி கிழக்கில் மக்கள் முன்னணிக் கூட்டம்

(வடமராட்சி கிழக்கு)
''சிங்கள மக்களுக்கு ஓர் இறுதிச் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளோம். அதனைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு அவர்களுடையதாகும்''.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் உடுத்துறையில் நடந்த கூட்டத்தில் கூறினார்.

வடமராட்சி கிழக்கில் முதன்முதலாகக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது, ''கடந்த காலத்தில் தமிழ் அரசியல்வாதிகள், சிங்கள அரசாங்கங்களோடு பல தடவைகள் பேச்சுவார்த்தைகளை நடத்தியதோடு, ஒப்பந்தங்களையும் செய்தார்கள். ஆனால் அவைகள் ஒன்றும் நிறைவேறாமல் தோல்வியிலேயே முடிந்தன. இன்று நாம் பலம் பொருந்திய ஓர் அமைப்பாக இருந்து கொண்டே பேச்சுவார்த்தை நடத்துகின்றோம்.

இந்த இறுதிச் சந்தர்ப்பத்தைச் சிங்கள மக்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு அவர்களுடையதாகும் ஆயுத ஒப்படைப்பு என்ற பேச்சுக்கே இப்போது இடமில்லை. முதலில் தமிழ் மக்களின் பாதுகாப்பும், உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றார்''.

இக் கூட்டத்தில் வடமராட்சித் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பொறுப்பாளர் திரு சூசை வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. குணம், திருமதி பாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் திரு. விக்கினா இறுதியில் நன்றி கூறினார்.

## முஸ்லிம் பாடசாலையில் குடிநீரின்றி மாணவர் அவதி

(அம்பாறை)
கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த கல்முனைக்குடி, அல்-சொகரா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் மதிய போசனத்தின் பின்னும், மற்றும் நேரங்களிலும் குடிக்க நீரின்றி மிகவும் கஷ்டமுறுகின்றனர்.

இங்குள்ள தண்ணீர் பம்ப் திருடப்பட்டதையிட்டு அவ்வூர் பொது மக்களால் 5200/- க்கு புதிய பம்ப் ஒன்று வாங்கி பாடசாலை அதிபரிடம் கையளிக்கப் பட்டது. இந்தப் பம்ப் உரிய இடத்தில் பொருத்தப்படாததால், மாணவர்கள் குடிநீர் தேடி அயல் வீடுகளுக்குச் செல்கின்றனர்.

மற்றும் இப்பாடசாலையில் உள்ள சகல குறைபாடுகளையும் களைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். என இப் பகுதிமக்கள் கேட்கின்றனர். (48)

## கமநல சேவை அதிகாரி எச்சரிக்கை
## விவசாயத்தை நாசமாக்கும் ஆடு, மாடுகள் பிடிக்கப்படும்

(பருத்தித்துறை)
கமத்தொழில் காணிகளில் அத்துமீறி நுழையும் மிருகங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென பருத்தித்துறைத் தொகுதி அம்பன் [?] கமநல சேவைநிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. பீ. இராசையா எச்சரித்துள்ளார்.

1979ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க கமநலச்சேவை சட்[illegible]

[illegible] விடப்படும்.

மிருகச் சொந்தக்காரர் நட்டம் செலுத்தத் தவறின் மிருகங்கள் ஏலத்திற்கு விற்பனை செய்யப்பட்டு நட்டம் அறவிடப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

கமத்தொழிற் காணிச் சொந்தக்காரர்கள் அல்லது இருப்பாட்சியாளர்கள் அல்லது இவர்களினால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் இத்தகைய விலங்கினங்களைப் பிடிப்பதற்கு இவ்வொழுங்கு விதிகளின் [illegible]

சொந்தக்காரர்கள் தமது விலங்கினங்களைக் கட்டி வளர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (25)


**யாழ்நகரில் இன்றைய சினிமா**

**வின்சர் - யாழ்**
10·30, 2.30, 6.30
சிவகுமார்-சுஜாதா நடித்த
**அன்னக்கிளி**
(புதியபிரதி)

102 வது நாளாக!!
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
**மனோகரா - (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
102 நாள் வெற்றிநடை போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)


## ஆலயத்தில் சிரமதானம்

(அம்பாறை)
வீரமுனை ஸ்ரீ சித்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த கால வன்செயல்களினால் சிதைவுற்ற வேலிகள், வீதிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் பெருந்திரளான அவ்வூர் மக்கள் சிரமதானம் மூலம் செப்பனிட்டனர்.

இதனைத்தொடர்ந்து மேற்படி கிராமத்தில் பொது மக்கள் உதவியுடன் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பல சிரமதான வேலைகளைச் செய்யவிருப்பதாக சம்மாந்துறை புலிகள் இயக்கப் பொறுப்பாளர் திரு. நிதி தெரிவித்தார். (48)


**நடன அரங்கேற்றம்**
**10. 04. 90 [நாளை]**

விம், Bond Institutes 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். B 751

### உருவப்படம்

## திரைநீக்கம்

யாழ். பல்கலைக்கழகத்தில் நிர்வாகப் பிரிவின் உதவிப் பதிவாளராகக் கடமையாற்றிய அமரர் திரு. சு. யோகநாதனின் உருவப்படம் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் திரு. அ. துரைராசா அவர்களினால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. (24)

மண்ணினைக் காத்திட
மரணம் அடைந்த
புண்ணிய வாளனே
உன் உயிர் பிரிந்து
வருடங்கள் மூன்றும்
சென்று விட்டதே
எங்கள் நெஞ்சினில்
உந்தன் நினைவு
அழியா நினைவே
ஆகிவிட்டது.

விழி போல் தமிழ் மண்
காத்த வேங்கையே
செந்தமிழ் ஈழம்
செழித்திடு மாறுநீ
சிந்திய இரத்தம்
எமது நாடியில்
ஓடிக் கொண்டே
இருக்கும் உன் உறுதியை
பாடிக் கொண்டே
இருக்கும்.

குடும்பத்தினரும்

சாவற்கட்டு,
மானிப்பாய்.

நண்பர்களும்.
(B-749)


# O/L பகல் வகுப்பு Day Class

காலை, மாலை வகுப்பு

Typing, Short Hand, Spoken English

ஆரம்பம்: 10- 4- 90

# BOND

INSTITUTES , JAFFNA

# O/L

DECEMBER, 1990, 91..

முறையான, பாடத்திட்டத்திற்கேற்ற விரிவுரைகள்

இலவச கற்கைப்பொதிகள் [STUDY PACKS]

(B-751)


துள்ளார்.

1979ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க கமநலச்சேவை சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளின்கீழ் அத்துமீறி நுழையும் மிருகங்கள் பிடிக்கப்பட்டு நட்டம் அற

எவரேனும் ஆள் இத்தகைய விலங்கினங்களைப் பிடிப்பதற்கு இவ்வொழுங்கு விதிகளின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுளளது.

எனவே மிருகங்களின்

# சங்கானை விறகு காலைகள் தராசுக்கு சீல் வைக்கவில்லை

## அதிகாரி குற்றச்சாட்டு

(பண்டத்தரிப்பு)

அரசாங்க விறகுகாலைகள் கடந்த நான்கு வருடங்களாக தராசுகள் சீல் வைக்கப்படவில்லை.

மார்ச் மாதம் 21 ஆந் திகதி தொடக்கம் ஏப்ரல் 4 ஆம் திகதி வரை சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரதேச கடைகளின் தராசுகள் செப்பணிட்டு சீல் வைக்கப்பட்டன.

அளவைகள் நிறுவைகள் பரிசோதகர் திரு. கா. நாகலிங்கம் மேற்பார்வையில் தராசுகள் வைக்கப்பட்டபோது, சங்கானை, வட்டுக்கோட்டை அரசாங்க மரக் கூட்டுத்தாபன விறககாலை தராசுகள் சீல் வைக்கப்பட்டதா என கேட்கப்பட்டபோது அவர்களுக்குஅறிவித்தும் சீல் வைக்க ஏற்பாடு செய்யவில்லை எனக் கவலை தெரிவித்தார். (12)

### அரசியல்

## கருத்தரங்குகள்

(கரவெட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராமசேவகர் பிரிவுகள் தோறும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

## நெல்லியடியில் விஸா கார்ட் திட்டம்

இலங்கை வங்கியினால் அணமையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சீபாங் விசாக் கார்ட் திட்டம் அண்மையில் நெல்லியடியிலும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் வைபவத்தினை சம்பிரதாய முறைப்படி சிபாங் விசாக் கார்ட் முகவர் திரு. வி. ரி. தம்பிப்பிள்ளை (திசான்ரோஸ் முகாமையாளர்) டிடம் சிபாங் விசாக் கார்ட் உத்தியோகஸ்தர் திரு. எஸ். றோய் காந்தராசா (அதிபர்) பொருட்களைப் பெற்றுக் கொண்டார்.

அச்சமயம் இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எஸ். நடராசலிங்கம் உட்பட வங்கி ஊழியர்கள் பலரும் காணப்பட்டனர், (18)

### அன்னை பூபதி நினைவாக சிரமதானப்பணி

(சுதுமலை)

சுதுமலை தெற்கு சாவக்காடு மகாத்மா சனசமூக நிலையமும், பொதுமக்களும் சேர்ந்து அன்னை பூபதி நினைவாக சிரமதானப் பணிகளை மேற்கொண்டார்கள்.

கூடுதலாகப் பெண்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில், அப்பகுதி வீதி ஓரங்களில் வளர்ந்து நின்ற புற்கள், புதர்கள் வெட்டி துப்பரவு செய்யப்பட்டதுடன் இந்து ஆலயம் ஒன்றின் சுற்றாடலும் துப்பரவு செய்யப்பட்டது. (19)



# செல்வி பிரேமா சுந்தரலிங்கம்

(யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி)

வட இலங்கை சங்கீத சபையின் ஆதரவில் நடன அரங்கேற்ற நிகழ்ச்சி யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் 1990 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளரும் வட இலங்கை சங்கீத சபைத் தலைவருமான

## திரு. இரா. சுந்தரலிங்கம்

அவர்கள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

திரு. திருமதி பொ. சுந்தரலிங்கம்

34/2 கச்சேரி கிழக்கு ஒழுங்கை
யாழ்ப்பாணம். (R/100)

# அன்னையே உனை மறவோம்

அன்னையர் முன்னணியின்
அன்னையாய் இருந்த
- அன்புத்தாயே
அயோக்கியனின் அடாவடி
கண்டு - நீயோ
அகிம்சையில் இறங்கினாய்
ஓர் மாத காலம் நீர்
இருந்த உண்ணா நோன்பு
- எம்
தமிழினத்தின் விடிவுக்கு
நீ இட்ட வித்துக்கள்
உழுத்துப்போகும் உடலை
கண்டு நீ அஞ்சவில்லை
உண்மையில் நீ - ஒரு
தியாகச் சுடர்
தமிழீழத்தில் சமதானம்
வேண்டி நீ எடுத்த
- முடிவு
சுதந்திர தாகத்தின்
- நீர் துளிகள்
உன் உயிர் பிரிந்து
இரண்டாண்டு சென்றாலும்
உம் உருவோ ஈழம்
எங்கும் ஜொலிக்கிறது
அன்பிற்கு அன்னையாய்
அணைந்து விட்ட
தீபச்சுடர் பூபதியே
கடல்கள் வற்றலாம்
கல்மலைகள் அழியலாம்
இயற்கைகள் மாறலாம்
- ஆனால்
உன் நினைவுகளோ
எம் தமிழர்களின்
கற் சுவராம் - நெஞ்சங்களில்
பொறித்திட்ட எழுத்துக்கள்
அவை என்றும் மாறாது
உன் திருநாமம் என்றும்
-போற்றுவோம்.




ஆயுத முனையிலே பல உயிர்கள்
மண்டியிடடதம்மா
ஆனால் அதனை எண்ண முடியவில்லை
அகிம்சை ரீதியிலே இரு உயிர்கள்
கருகியதம்மா
அதைத் தான் எம்மால் மறக்க முடியவில்லை
அம்மா உனது இலட்சியம் வெல்க

**ர. இராசரத்தினம்**
மிளிவாட்
சுன்னாகம்.
B 727

தாயகம் காத்திடுவாய் எம்
தாயடி போற்றிடுவோம்
அடிமை விலங்கறுத்து
உன் புகழ் ஏற்றிடுவோம்

**K·V இராசரத்தினம்**
அவனியுவஸ்
சுன்னாகம்.

மண்ணின் துயர்துடைக்க
கொடுமை தனை எதிர்த்து
தியாக வேள்வி செய்த அன்னையே

**S.K. கணேசன்**
இல. 8 சென்ரர் மார்க்கட்
சுன்னாகம். (B-723)

காவியம் படைத்த அம்மா

போர் வந்தே முத்தமிடும்
போதினிலே எம் வாழ்வு
ரத்தத்தில் நீச்சலிடுந் தெப்பம்! ஈழ
யுத்தத்தில் உன் உயிர்தானே கப்பம்
தாயே!

**சு. செல்வராசா**
**E. சுப்பிரமணியம்**
**K.K.S றோட்**
சுன்னாகம்.

தமிழீழ மண்ணின் மணித்துளியா
மாதர் தலைவியாகி மரணித்த அன்னையே
வாழ்க உன் தியாக வரலாறு

**S·N·P தயாபாலன்**
**லக்சுமி நாராயன் ஸ்ரோர்ஸ்**
சுன்னாகம்.

**தியாக தீபம் அன்னை பூபதிக்கு**
**எமது அஞ்சலிகள்**

**க. செல்வராசா**
செல்வா காட்வெயஸ்
சுன்னாகம்.

சாப்பிட்ட நின் கூடச் சொரிக்கவில்லை தமிழ்ச்

காவியம் யடைத்த அம்மா
மேதினியில் நிலைக்கும் உந்தன் நாமம்

**VP. செல்லையா**

பியூற்றி சென்ரர்
கே. கே. எஸ். றோட் சுன்னாகம்

யாகம்நடத்தியோர்
தியாக வேள்வியில்
ஆகுதி ஆனவளே - எங்கள்
அன்னை பூபதியே

## A. சோமசுந்தரம்

இல. 9 அபிராமி பென்சிகவுஸ்
சுன்னாகம்.

B 724



# அன்னை பூபதிக்கு எமது இதயவஞ்சலி!

ஈழத் தமிழ் மக்களின்... விடிவுக்காய்
தன் இன்னுயிரை அர்ப்பணித்த அன்னையே!
கிழக்கு மாகாணம் பெற்றெடுத்த பூபதி!
நீ ஈழத் தமிழ் மக்களிடம் அழியா இடம்
பெற்று விட்டாய்
ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு உனது
இரு ஆண்பிள்ளைகளைப் பலி கொடுத்தாய்!
இந்திய ஆக்கிரமிப்பு படைக்கெதிராய்
போராடி உன்னுயிர் நீத்தாய்!
தமிழீழ மக்களது இன்னல் துடைக்கப்
புறப்பட்ட அன்னையே!
உனது இரு பெரும் கோரிக்கைகளை
இந்திய அரசு மறுத்ததேன்!
அன்னை பூபதியே! உனது உயிர்த் தியாகம்
வீண் போகவில்லை
உலகிலே தமிழ் மக்கள் இருக்கும் வரை
உனது நாமம் திகழுமம்மா!
அன்னையினது குடும்பமே ஓர்
தியாக குடும்பமானதே!
ஈழத் தமிழ் மக்கள் போராட்டத்தில்
உண்ணா விரதம் மேற் கொண்ட
முதற்பெண் நீயம்மா!
சர்வதேச ரீதியில் உண்ணா விரதம்
மேற்கொண்ட முதற் பெண் நீயம்மா!
தமிழீழ விடுதலைப் போராட்ட தியாக
வரலாற்றில் நீ ஓர் தனியிடம்
பெற்று விட்டாய்!
தமிழ் மக்களுக்கு இந்திய அமைதிப்படை
இழைத்த அநீதிகண்டு போராடினாய்!
அன்னை கணபதிப் பிள்ளை பூபதியே - நீ
இன்னுயிர் நீத்து இரண்டு ஆண்டுகள் சென்றாலும்
உனது நோக்கங்களையும் தியாகங்களையும்
நாங்கள் என்றும் மறவோம்
உனது தியாகம் பெறுமதி வாய்ந்தது
தமிழீழ வரலாற்றில் தனியிடம் பிடித்த
அன்னையே
தமிழீழ மக்கள் நெஞ்சங்களில் என்றும்
நீ வாழ்வாய்!

சாப்பிட்ட தின் கூடச் சொரிக்கவில்லை தமிழ்ச்
சந்ததியோ பலநாளாய்ச் சிரிக்கவில்லை
இதற்காகவோ தாயே நீ நோன்பு இருந்தாய்

**K. அசோகராஜா**

கிருபா வீடியோ சென்ரர்
சுன்னாகம்.

ஆவியைப் பணயம் வைத்தே
அறந் தமிழர் மீட்க
பூமியும் நடுங்கிப் போகப்
புரிந்த நற்றவத்தால் நன்று
காவியம் படைத்த எங்கள் அம்மா
களங்கமில்லாப் பூபதியே
மேவிடும் உந்தன் நாமம்
மேதினி நிலைக்கு மட்டும்!

## த. சிவசண்முகராஜா

மாங்கனி சில்க்ஸ்
இல. 8 நியூ மாக்கெட் சுன்னாகம்.

சாவே உனக்கொரு நாள்
சாவு வந்து சேராதோ
தீயே உனக்கொரு நாள்
தீ முட்டிப் பாராமோ
அன்னை பூபதிக்கு
எமது அஞ்சலி



"வர்த்தகர்கள்".
திருநெல்வேலி.

(K/90)



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி





# கற்பகம்

(யாழ்ப்பாணம்)

இது வரை காலமும் திருத்த வேலைகளுக்காக பூட்டப்பட்டிருந்த யாழ். பொன்னம்பலம் வீதியில் அமைந்துள்ள கற்பகம் விற்பனை நிலையம் தற்போது விற்பனையை ஆரம்பித்துள்ளது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம். B/733



# பகிரங்க ஏலவிற்பனை

எமது சங்கத்தில் பழுதடைந்த மின்தறி நூல் வகைகள் 11-4-90ஆம் திகதி காலை 10 மணிக்கு அலுவலக வளவில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும். விரும்பியோர் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்,

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
பண்டத்தரிப்பு.

B/735



அகிம்சையின் சிகரம் அன்னை பூபதிக்கு
எங்கள் அஞ்சலிகள்



வடக்கில் திலீபன் கிழக்கில் பூபதி
வளமுள்ள ஈழத்தின் தெய்வங்கள் ஆகினர்
ஆணினம் மட்டோ பெண்ணினம் கூட
அனைத்து வழியிலும் சமனென்று ஆக்கினர்
அழியாப் புகழை அகத்தே கொண்டு
அழியாக் கறையை இந்திய ஆட்சிக்கு ஆக்கினாள்
எத்தனை புகழாலும் எடுத்து இயம்பினும்
அத்தனையும் பூபதி அன்னைக்கே அர்ப்பணம்
அன்னையே உன்பணி அகல்விளக்காகும்
பொன்னெழுத்தால் சரித்திரம் பொறித்தே நிற்கும்
உந்தன் கல்லறை எங்களின் கோவில்
உந்தன் தியாகம் எம்மவர் கோவில்
நற்றமிழ் அன்னையாய் ஆகிய அம்மையே
பொற்பதம் நறுமலர் தூவியே போற்றுவோம்!


# நொராட் நிறுவனம் குரும்பசிட்டிக்கு 21/4 இலட்சம்

(பண்டத்தரிப்பு)

அண்மைய ஆண்டுகளின் வன்செயல்களால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட குரும்பசிட்டி கிராமத்திற்கு நொராட் நிறுவனம் இரண்டேகால் இலட்சம் ரூபா அன்பளிப்புச் செய்துள்ளது.

இப்பணத்தை அக்கிராம மக்களுக்குச் சுழற்சி முறையில் கடனாகக் கொடுத்து, அக்கிராம மக்களின் பொருளாதார முயற்சிகள் மூலம் மேல் நிலையடையச் செய்வதே நோக்கமாகும்.

நொராட் நிறுவனம் யாழ். அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மூலம் இப்பணத்தை வழங்கியுள்ளது.

யாழ். அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 4 வருடத்தில் 400 குடும்பங்கள் பயன் பெறும் வகையில் அபிவிருத்தித் திட்டம் வகுத்து செயற்படுத்துகின்றது. முதற்கட்டமாக 50 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, தலா 4509-/ ரூபா வழங்கியுள்ளது. இதி 3000/- ரூபாவிற்கு 3 ஆடுகள் வாங்கவேண்டும். மிகுதி 1500/- ரூபாவில் அவற்றிற்கு வதிவிடம் அமைக்கவேண்டும்.

இவ்வாறு கடனுதவி பெறுவோர் ஒரு கால எல்லையின் பின், மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகையைத் திருப்பிக் கட்டவேண்டும். அப்படிக் கட்டும் பணத்தைச் சேர்த்து ஏனையவர்களுக்கு முன்னுரிமை ஒழுங்கில் தலா 4500/- ரூபா வழங்கப்படும். இப்படியே தொடர்ந்து வழங்குவதன் மூலம் 4 ஆண்டுகளில் 400 பேர் இச்சுழற்சி முறை உதவி மூலம் தொழில் ரீதியான ஒரு சீவனோபாயத்திற்கு ஸ்திரப்படுத்தப்பட்டு விடுவர். இவ்வாறே கிராமத்து வறிய குடும்பங்கள் இந்த உதவியைக் தொடர்ந்து பெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (12)

# குடிநீர் வழங்க பௌசர் வந்தது

(புங்குடுதீவு)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சுமார் எண்பத்தையாயிரம் (85'000/-) ரூபா பெறுமதியுள்ள, ஆயிரம் கலன் கொள்ளக்கூடிய கொள்கலனையுடைய புதிய 'பௌசர்' ஒன்றை அண்மையில் கொள்வனவு செய்துள்ளது.

இந்த பௌசர் மூலம குடிதண்ணீர்ப் பிரச்சினையால் அல்லலுறும் புங்குடுதீவு மக்களுக்கு நியாயமான விலையில் குடிதண்ணீர் விநியோகிக்கப்படும். (22)

# இன்று திறப்புவிழா

(பண்டத்தரிப்பு)

எட்டு இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் இன்று காலை 10 மணிக்கு யாழ் மாவட்ட புதிய அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

1987 வன்முறைகளின் போது இந்த அலுவலகம் சேதமடைந்திருந்தது.

# உப தபாற்கந்தோர் புதிய கட்டிடம்

(அம்பாறை)

பொத்துவில் தொகுதியைச் சேர்ந்த ஒலுவில் முஸ்லிம் கிராமத்தில் உள்ள உப தபாற்கந்தோர் தனியார் கட்டிடம் ஒன்றில் இயங்குவதையிட்டு, தனியான ஒரு கட்டிடம் அமைக்க வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதனால் புதிய உப தபால் நிலையக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம் வெகு விரைவில் அமைச்சர் மன்சூரினால் திறந்துவைக்கப்படவிருக்கின்றன, (48)

# யோகர் சுவாமி குருபூசை

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறையில் நடைபெற்ற யோகர் சுவாமிகள் நினைவு தின குருபூசையில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

திருமதி நகுலேஸ்வரன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.


**Data Processing and Computer Programing in BASIC LANGUAGES**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**9 April 1990**

| | | |
|---|---|---|
| Basic Languages | - | 9-00 a. m. |
| Lotus 1, 2, 3 | - | 10-30 a. m. |
| Word Processing | - | 1-30 p. m. |

Contact

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, ST. PETERS LANE.
HOSPITAL ROAD,
JAFFNA.

(B/599)

பொற்பதம் நறுமலர் தூவியே போற்றுவோம்!

நவிண்டில்

நாவலர் சனசமூக நிலையம்

## ஏரம்பு பாலச்சந்திரன்

## (அருண்) சந்துரு

**வீர மலர்வு: 18. 10. 1960**
**வீர உதிர்வு: 9. 4. 1988**

செம்மை சான்ற எம்மொழி காக்கவும்
ஈழத் தமிழரின் இடரது போக்கவும்
சிங்களப் பேய்களைச் சங்காரம் செய்யவும்
வீறுகொண்டெழுந்த வேலின் செல்வன்
பிரபாகரனது வேங்கைகள் படையில்
வீரனாய்ச் சேர்ந்தாய் வேங்கையுமானாய்
இந்திய அரசின் ஈனச் செயலால்
சயினைற் அருந்தித் தம்முயிர் நீத்த
பன்னிரு வீரருள் பாலனின் நண்பன்
வீர வேங்கை அப்துல்லாவின் ஆறாம் மாத
அந்தியேட்டிக்கு
பிரசன்னாவுடன் பிரிவிலாதிருக்கும்
வீர வேங்கைகள் நண்பர் குழாத்துடன்
சாவகம் வந்து தரித்து நின்று
மீண்டு போகும் போது விதி செய்த சதியால்
பொல்லா அசுரர் பொய்மை அரக்கர்
நற்செயல் புரியா நபுஞ்சகர் நாய்கள்
தமிழரை அழித்த சளுக்கர் வஞ்சகர்
இந்தியப்படையினர் இடையில்
அகப்பட்டுச் சயினைற் அருந்தினீர்
வீரராய் மலர்ந்து வீரராய் உதிர்த்தீர்
இப்படி உதிர்ந்த செய்த் எம் செவிக்கு
எட்டியதோ அப்பா ஒன்பது நாளின் பின்னே
காதாற் கேட்டோம் உங்களைக் கண்ணாற் காணவில்லை
உங்களை நினைந்துருகினாலும் எம்முள்ளம்
மாவீரன் சீசரின் வார்த்தையை எண்ணியது
"அஞ்சினார்க்கு சதமரணம் அஞ்சாத நெஞ்சின்
ஆடவருக்கொரு மரணம் அவனிமிசைப் பிறந்தோர்
துஞ்சினரென்றிருந்தும் சாதலுக்கு இரங்கும்
துன்மதி மூடரைக் கண்டாற் புன்னகை செய்பவன் யான்"
இவ் வார்த்தை எம்முள்ளத்தில் ஊன்றி வளர்ந்தாலும்
தங்கத் தமிழ்த் தம்பி தமிழீழம் வரும்போது
பாகாய் உருகிப் பதைத்த எமதுயிர்கள்
கண்டாய் இறுகிக் களிப்பே உருவாகும்.
ஓம் சாந்தி

இங்ஙனம்
உங்கள் பிரிவால் இன்னலுறும்

**ஆச்சி, அப்பா, அம்மா, அக்காமார், அத்தார்மார், அண்ணாமார், அண்ணிமார், தங்கைமார், தம்பிமார், மருகிமார், மருமகன், மகன்மார் மகள்மார், மாமிமார், மாமா, குஞ்சியம்மா, மைத்துனிமார், மைத்துனர்மார், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

(R.97)

## 90 ஆம் நாள் நினைவாஞ்சலி
**09- 04- 90 (திங்கட்கிழமை)**



**சிவச்சாமிக் குருக்கள் சபேசசர்மா**

| படைப்பு | அழிப்பு |
|---|---|
| 24- 12- 71 | 09- 01- 90 |

கரணவாய் - தெற்கு
கரவெட்டி.

B/745

## எழுது வினைஞர் தேவை

சாவகச்சேரிகைத் தொழில் வர்த்தக சங்கத்திற்கு ஒரு எழுது வினைஞர்தேவை. 18 வயதிற்கு மேற்பட்டவராயும் ஆங்கிலத்தில் கடிதத்தொடர்புகள் செய்யக்கூடிய ஆண்கள் மட்டும் தமது சொந்தக் கையெழுத்தில்நேரில் அல்லது தபால் மூலம்விண்ணப்பம் ஏப்ரல் 20-ஆம் திகதிக்குமுன்னர்அனுப்பி வைக்கவும். சாவகச்சேரி நகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.

முகவரி: செயலாளர்,
என். எம். ரி. பிஜதர்
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

R/91

## ஈழநாதம்
## மக்கள் தினசரியின்

வல்வெட்டித்துறையின் எமது
விநியோகஸ்தர்

மு: பிறேம்குமார்
திலீபன் கூல்பார்
வல்வெட்டித்துறை.

## புதுவருட விஷேச கழிவு 15 வீதம்

வெளிநாட்டிலுள்ள
உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு
புதுவருட பரிசுகள், பார்சல்கள்
அனுப்புவதற்கு 15 வீத கழிவு வழங்கப்படுகிறது.

தொடர்பு கொள்க:-

## DHL. INTERNATIONAL LTD.

**C/O Cosmos Marketting Services Ltd,**
**337, Kasturiar Road,**
**Jaffna.**

(B.744)

## மட்டு. நகர் கொடிகளால் அலங்கரிப்பு

(வந்தாறுமூலை)

காலஞ்சென்ற அன்னை பூபதியின் நினைவாக மட்டு. நகரின் பல வீதிகளும் கறுப்பு வெள்ளைக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுக் காணப்படுகிறது. கோட்டைமுனைப் பாலத்தில் மூங்கில்கிளைகளில் கறுப்பு - வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. மற்றும் மணிக்கூட்டுக் கோபுரம், மத்திய வீதி, அந்தோனியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி மற்றும் பல வீதிகளும் அலங்கரிக்கப்பட்டுக் காணப்படுகின்றன.

## உண்ணாவிரதமும் திறப்பு விழாவும்

(கிளிநொச்சி)

விளையாட்டுமைதான திறப்பு விழாவும் அன்னை பூபதியின் ஞாபகார்த்த உண்ணாவிரதமும் கடந்த சனிக்கிழமை செல்வபுரம் முருகண்டியில் நடைபெற்றது.

திரு. சி கந்தசாமி தலைமையில் நடைபெறும் இவ் உண்ணாவிரதத்தை அடுத்து மாலை 3 மணியளவில் விளையாட்டு மைதானம் திறந்து வைக்கப்பட்டது.

வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரன் கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கோபி முருகண்டி பிரதேசப் பொறுப்பாளர் திரு. ஜமால் திரு. சி சந்தானம் திரு. கு. நாகேந்திரன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

## செய்யும் தொழிலே தெய்வம்

(விசேட நிருபர்)

''செய்யும் தொழிலே தெய்வம் அதன் சிறப்புத் தான் செல்வம் என்பதற்கேற்ப என்ன தொழிலைச் செய்தாலும் சிறப்பாக நிறைவேற்றுவதன் மூலம்தான் நாட்டின் மேம்பாட்டுக்கான செல்வத்தை ஈட்ட முடியும்.''

வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர்சங்கத்தின் புத்தூர் கிளைச்சங்கக் கூட்டம் கடந்த 4- ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் நடைபெற்றபோது கலந்து பேசுகையில் திரு. ஞானப்பிரகாசடாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளைச் சங்கத் தலைவர் திரு. சி. லோகநாதன் தலைமையில்கூட்டம் புத்தூர் கிழக்கில் நடைபெற்றது.

திரு. அ. ஞானப்பிரகாசடாஸ் தொடர்ந்து பேசுகையில் ஒரு காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட நடைமுறைகள் இன்னொரு காலகட்டத்

# நேபாளத்தில் நெருக்கடி அதிகரிப்பு

## ஆர்ப்பாட்டங்களும் துப்பாக்கிச்சூடும் தொடர்கிறது

(காட்மண்டு)

நேபாளத்தில் மேலும் ஆர்பாட்டங்களும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அதே வேளை நெருக்கடியை தீர்க்க அரசினால் புதிய முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை 23 ஆக உயர்ந்திருக்கிறது. இவர்களுள் பிரித்தானிய நாட்டைச் சார்ந்தவரும் ஒருவராவர். அத்துடன் நாடு பூராவும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போதும் இவ் ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன.

ஆர்பாட்டங்கள் நடைபெறும் அதேவேளையில் பல கட்சிகளாக உரிமைகோரிப் போராட்டத்தில் ஈடுபட்ட எதிரணி தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களை ஒன்றுகூட்டி பொது அணுகுமுறை ஒன்றை வகுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் இதுவரையில் தாங்கள் அரடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடவில்லை என்றும், இச் செய்தியானது தவறானதும், ஆதாரமற்றதும் என எதிரணித் தலைவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஐக்கிய இடதுசாரி முன்னணியின் தலைவரான திருமதி சான பிரதாப் தகவல் தருகையில் மன்னர் திபேந்திரா வெளியிட்டுள்ள அரசியல் பிரகடனம் இயக்கத்தின் எதிர்பார்ப்பிற்கு ஏற்றதாக இல்லை. என்றும் பலகட்சி ஆட்சி முறை பற்றி மட்டுமே தாம் பேச்சுவார்த்தைக்கு தயாராக உள்ளோம் என்றும் குறிப்பிட்டார்.

இக் கட்சியினர் கூட்டாக விட்ட அறிக்கையில் பலகட்சி முறையினால் மட்டுமே மக்களின் எண்ணங்களை ஈடேற்ற முடியும் என்று வலியுறுத்தி உள்ளனர்.

அதே வேளை ராச்சிய பஞ்சாயத்தை கலைத்துவிட்டு பல கட்சி முறை ஆட்சிக்கு இணங்குமாறு ராச்சிய பஞ்சாயத்து உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ரவிந்திரநாத் சர்மா மன்னருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

### கொலம்பியாவில்

# கடத்தல் மன்னர் அச்சுறுத்தல்

(பொகோட்டா)

கொலம்பியாவின் அதி சக்தி வாய்ந்த போதைவஸ்து கடத்தல் மன்னர் தாம் அரசியற் காரணங்களுக்காகப் போராடும் போராளிகள் என்று அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளார்கள். இது கொலம்பியா ஆட்சியாளருக்கும் புதிய தலையிடியை ஏற்படுத்தியுள்ளதாம்.

அரசாங்கம் தடுத்து வைத்திருக்கும் தமது கோஷ்டியைச் சேர்ந்த இருவருக்கும் ஏதாவது தீங்கு ஏற்பட்டால், தாம் கடத்தி வைத்திருக்கும் செனேற் அங்கத்தினரைக் கொலை செய்யப் போவதாக அவர்கள் அரசாங்கத்தை எச்சரித்துள்ளார்கள்.

கொக்கயின் போதை வஸ்துக் கடத்தல்காரர்களை அமெரிக்கா தேடி வருவது குறிப்பிடத்தக்கது. தம்மை அமெரிக்காவிடம் கையளிக்காவிட்டால் தாம் கொலம்பியா அரசாங்கத்திடம் சரணடையத் தயார்என எஸ்கோபாரும் அவர்சகபாடிகளான பிரபல்ய கொக்கயின் கடத்தல்காரர்களும் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை தாம் வழங்கிய காலக்செடுவுக்குள் அரசாங்கம் சிறைபிடித்து வைத்திருக்கும் கொக்கயின் கடத்தல்காரர்களை விடாவிடில், பொகோட்டா நகரில் செல்வந்தர்கள் வாழும் பகுதியில் தாம் குண்டொன்றை வெடிக்க வைக்கப் போவதாக இன்னொரு கோஷ்டி அறிவித்துள்ளது.

## கப்பலில் ஏற்பட்ட தீவிபத்தால் 50 பேரைக் காணவில்லை

(அமிஸ்ரடாம்)

டென் மார்க்கில் கப்பல் ஒன்று தீப்பற்றியதில் 70க்கும் அதிகமானோர் இறந்துள்ளனர். 50 பேர் வரையில் காணாமல் போயுள்ளனர்.

நோர்வேயில் இருந்து டென்மார்க் சென்ற 'ஸ்கன்டினேவியன் ஸ்ரார்' என்ற கப்பலே இத் தீ விபத்துக்கு உள்ளானது.

தீயணைக்கும் படை கப்பலை சென்றடைய முன்னபே கப்பலில் இருந்து குதிக்குமாறு பயணிகளுக்கு கப்பல் தலைவர் உத்தரவிட்டிருந்தார் என்றும் தீயணைக்கும் படையினர் சென்றடைந்த போது பல சடலங்கள் மிதந்ததாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இவ் விபத்தானது தற்செயலாக நடந்தது அல்ல என்றும் நாசகார வேலையே என்று தலைவர் கூறியுள்ளார்.

# பஞ்சாபில் 6 மாதத்துள் தேர்தல் நடத்த அரசு விருப்பம்

(டெல்லி)

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் ஆறு மாதத்திற்குள் தேர்தலை நடத்தி விட மத்திய அரசாங்கம் ஆர்வம் கொண்டுள்ளது என இந்தியப் பிரதமர் வி.பி.சிங் தெரிவித்துள்ளார்.

பயங்கர வாத நடவடிக்கைகளை முறியடித்து ஜனநாயக

...யுள்ளார். இதன் பிரகாரம் மேலும் பொலிசாரை பஞ்சாபில் ஈடுபடுத்துவது என்றும் பாதுகாப்புப் படையினருக்கு இன்னும் நவீன ஆயுதங்களை வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

### கிளிநொச்சி மாவட்டம்

## புனர் நிர்மாணத்திற்கு

## பாடசாலை அபிவிருத்தி சபை கூட்டம்

(வேலணை)

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சபையின் வருடந்தப் பொதுக்கூட்டம் வித்தியாலயத்தின் அதிபர் திரு. பொ. கேதாரநாதன் தலைமையில் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

## நிவாரணப் பணம் பெறுவதில் சிக்கல்

(வவுனியா)

சின்னத் தம்பனை கிராம மக்கள் மீளக் குடியமர்தல் நிவாரணப் பணம் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கடந்தகால சம்பவங்களினால் தமது வீடுகளை இழந்தவர்கள் மீண்டும் வீடுகளை அமைப்பதற்கான நிவாரணப் பணம் பெறுவதிலேயே மேற்படி சிக்கல் நிலைமை ஏற்

## விளையாட்டுச் சட்டங்கள் பற்றிய கருத்தரங்கு

(வேலணை)

விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடும் விளையாட்டுக் கழகங்கள், மன்றங்கள் மற்றும் விளையாட்டுத்துறைகளில் ஈடுபடுவோர்கள் ஆகியோர்களுக்கு, விளையாட்டுத்துறைகளில் உள்ள சட்டதிட்டங்கள், பங்குபற்றும் விதிமுறைகள் எவ்வாறு அமைய வேண்டுமென்பது பற்றிய கலந்துரையாடல் பயிற்சி வகுப்பொன்று நேற்றுக் காலை ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணியளவில் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. (14)

## வவுனியா கிராமங்களிலும் பூபதி நினைவுக்கூட்டம்

(வவுனியா)

வவுனியாவில் உள்ள புதுக்குளம், மருக்காரம்பளை, பாரதிபுரம், கணேசபுரம், சமயபுரம் ஆகிய பகுதிகளில் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் நினைவாக நேற்று சனிக்கிழமை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

உண்ணாவிரதம் ஆரம்பிப்பதற்கு முன்னர் வவுனியா விடுதலைப் புலிகளின் மக்கள்முன்னணிப் பொறுப்பாளர் திரு. தினேஷ் மேற்படி இடங்களுக்கு வந்து அன்னை பூபதியின் தியாகம் பற்றி உரை நிகழ்த்தினார் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

### வவுனியாவில்

# முஸ்லிம் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் தீர்க்கப்பட்டது

(வவுனியா)

ஆண்டியா புளியங்குளம் பகுதியில் இஸ்லாம் மதத்தில் இரு கொள்கைவாதிகளிகளிடையே இடம்பெற்று வந்த பிரச்சினை நீங்கிவிட்டது.

வவுனியா விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. தினேஷினால் இப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளது:

தற்போது அங்கு அமைதி நிலவுவதாகவும், வழமை போல மக்கள் பள்ளிவாசலுக்குச் சென்று வருவதைக் காணக்கூடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்களும், துப்பாக்கிகள் வைத்திருப்பவர்களும் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்து, தாங்கள் வைத்துள்ள துப்பாக்கிகள் யாவற்றையும் புலிகளிடம்ஒப்படைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்குப் புலிகள் கடும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். (தி)

# தமிழ்முஸ்லிம்மக்களின்உறவுக்கு மருதமுனைக் கிராமம் ஒரு பாலம்

## கலைவிழாவில் திரு. காஸ்ரோ உரை

(அம்பாறை மாவட்ட நிருபர்)

'அம்பாறை மாவட்டத்தில் தமிழர் - முஸ்லிம்கள் ஒற்றுமைக்கு ஒரு சிகரமாகவும், பாலமாகவும் திகழ்வது மருதமுனை முஸ்லிம் கிராமமாகும்.'

கல்முனை வடக்கு கொத்தணிப் பாடசாலைகளின் தமிழ்த் தின கலைவிழா மருதமுனை ஷம்சுல் இல்ம் மகா வித்தியாலய திறந்தவெளி

...சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக்கலை விழாவில் முஸ்லிம் சிறுவர்கள் தமிழ் கலாசாரத்தைப் பிரதிபலிக்கக்கூடிய வகையிலும், தமிழ் சிறுவர்கள் முஸ்லிம் கலாசாரத்தைப் பிரதிபலிக்கக்கூடிய வகையிலும் கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டமையைப் பார்க்கும்போது முஸ்லிம் - தமிழ் உறவுக்கு இக்கிராமமே

யில் ஒரு காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட நடைமுறைகள் இன்னொரு காலகட்டத்தில் முற்றாக நிராகரிக்கப்படுவதுஇயல்பு அதேபோன்று சமூக ரீதியாக நடைமுறையில் இருந்து வந்த குடிமைத் தொழில் இப்பொழுது வழக்கொழிந்து கொண்டிருக்கிறது. அந்த மாற்றத்திற்கு புத்தூர் கிழக்கு சிகைஅலங்கரிப்பாளர் சமூகத்தவரும் வரவேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இவ்வாறு அவர் கூறினார்.

கிளைச் சங்கத்தின் தலைவராக திரு. சி. லோகநாதனும் செயலாளராக திரு. செ. கோபாலும் தெரிவு செய்யப்பட்டனர். (21)

துள்ளார்.

பயங்கர வாத நடவடிக்கைகளை முறியடித்து ஜனநாயக முறைகளை மீண்டும் ஏற்படுத்துவதில் மக்களை ஈடுபடுத்த வேண்டும் என அவர் பஞ்சாப் நிர்வாகத்தை கேட்டுள்ளார். இவ்வாறு பிரதமர் வி. பி. சிங் புதுடில்லியில் நடைபெற்ற உயர் நிலைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோது குறிப்பிட்டார்.

அதேவேளை இந்திய உள்துறை அமைச்சர் முக்தி முகமது செய்யது பஞ்சாப் மாநில ஆளுநரையும் பஞ்சாப் பொலிஸ் கமிஷனையும் சந்தித்து ஆலோசனை நடத்தி

## படகு விபத்து 15 பேர் பலி 130 பேர் காணவில்லை

(ரங்கூன்)

பர்மாவில் ஏற்பட்ட படகு விபத்தில் 15 பேர் உயிர் இழந்துள்ளனர். 130 பேர் வரையில் காணமல் போயுள்ளனர். இத்தகவலை ரங்கூன் வானொலி அறிவித்தது. பர்மாவில் தென்கிழக்கு நதியொன்றில் இப்படகு கவிழ்ந்து இவ் விபத்து இடம் பெற்றது.

## நயினாதீவில் விளையாட்டுப் போட்டி

(வேலணை)

எதிர்வரும் இந்து சிங்கள புத்தாண்டையொட்டி நயினாதீவு சனசமூக நிலையங்களின் சமாசம் ஏற்பாடு செய்துள்ள. முதலாவது விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி (15.4.90) ஞாயிற்றுக்கிழமை நயினாதீவில் நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டுப் போட்டியில் மெய்வல்லுனர் போட்டிகளும், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், சறுக்குமரம் ஏறுதல், கயிறு இழுத்தல் போட்டி என்பனவும இடம்பெறவிருக்கின்றன. (14)

# புனர் நிர்மாணத்திற்கு 1கோடிருபாமேல்வழங்கப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்பட்ட உயிர் இழப்பு, தொழில் பாதிப்பு, இடம் பெயர்வு, ஊனமுற்றோருக்கு நிவாரணமாக இதுவரை ஒரு கோடி ரூபாவுக்கு மேல் வழங்கப்பட்டது.

புனர் வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்ட பணத்தைக் கொண்டே இவை வழங்கப்பட்டன. இதுவரை மேற்படி அமைச்சினால் வழங்கப்பட்ட பணம் அனைத்தும் வழங்கப்பட்டு விட்டது. அடுத்த கால் ஆண்டுக்கான பணம் வந்த பின்பே ஏனைய கொடுப்பனவுகள் நடைபெறவுள்ளன.

மீள் குடியமர்வுக்கும், தொழில் பாதிப்புக்கும் நிவாரணமாக சுமார் 50இலட்சம் ருபாவரை வழங்கப்பட்டது.

கணவன்மாரை இழந்த விதவைகள் 100 பேருக்கு தலா 50 ஆயிரம் வீதம் 50 இலட்சம் ரூபா வழங்கப்பட்டது.

மீள் குடியேற்ற நிவாரணப் பணம் பெறுவதற்கு உரித்துடைய 22,700 குடும்பங்களில் இதுவரை 1520 குடும்பங்களுக்கே தலா 2000 ரூபா வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது.

தொழில் பாதிப்பு நிவாரணம் பெற உரித்துடைய 1000 குடும்பங்களில் 500 குடும்பங்களுக்கு மட்டுமே தலா 4000 ரூபா வீதம் நிவாரணப் பணம் இதுவரை வழங்கப்பட்டது.

வீடுகளை இழந்த நிவாரணப் பணம் பெறுவதற்கு உரித்துடைய4406 குடும்பங்களில் 28 குடும்பங்களுக்கு 3 இலட்சம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டது.

மீள் குடியேற்ற நிவாரணம் தொழில் பாதிப்பு நிவாரணம், வீடமைப்பு நிவாரணம், உயிர் இழப்பு நிவாரணம், ஊனமுற்றோர் நிவாரணம் ஆகியன இதுவரை பெறாதவர்களுக்கு அடுத்தகாலாண்டு நிவாரணப் பணம் கிடைத்த பின் வழங்கப்படும். அதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

# கடமை உணர்வுடன் செயல் புரிய வேண்டும்

(வேலணை)

மக்களினது அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய விதங்களில் அஞ்சலக ஊழியர்கள் தங்களது கடமைகளை செய்ய முன்வர வேண்டும். அத்துடன் கடமையாற்றுகின்ற ஒவ்வொரு ஊழியர்களும் தமது கடமைகளின் போது கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய இவை மூன்றையும்தான் அஞ்சலக ஊழியர்களின் மிகப் பெரிய மூலதனமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேலணை அஞ்சலகத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களினது சேவையினைப் பாராட்டி நடத்தப்பட்ட சேவைநலப் பாராட்டு விழாவிற்கு தலைமை தாங்கி உரையாற்றிய வேலணை அஞ்சலக அதிபர் திரு. சம்பந்தர் சிவராசசிங்கம் தனது தலைமையுரையின் போது கூறினார். (14)

# வசாவிளான் ம. வித்தியாலய மைதானத்தில் சிரமதானம்

(பண்டத்தரிப்பு)

வசாவிளான் மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானம் பழைய மாணவர்களால் சிரமதானமுறையில் செப்பனிட்டு சீர் செய்யப்படுகின்றது.

அண்மையில் கூடிய பழைய மாணவர் சங்கத் தீர்மானப்படி இவ் வேலை தொடங்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் எடுக்கப்பட்ட ஏனையதீர்மானங்களாவன யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளருடன் நேரில் பேசி பூர்த்தியாகாமல் இருக்கும் கட்டடங்களை விரைவில் பூர்த்தியாக்கித்தர வேண்டுமென கேட்டல்.

பழைய மாணவர் சங்கத்தை விஸ்தரித்தல் அங்கத்தவர் வருட சந்தாவை இருபத்தைந்து ரூபாவாக்கல் ஆயுள் சந்தாவை ஆயிரம் ரூபாவாக்கல் பாடசாலைக்கு தேவையான பொருட்களை பழைய மாணவர் சங்கம் வங்கிக் கொடுத்தல் என்பனவாகும். (12)

அமைப்பதற்கான நிவாரணப் பணம் பெறுவதிலேயே மேற்படி சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

287 சதுர அடி உயரத்தில் வீடுகள் அமைத்தால்தான் அவற்றுக்காக வழங்கப்படும் பதினைந்தாயிரம் ரூபா கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால், ஆரம்ப வேலையைத் தொடங்குவதற்கு மேற்படி கிராம மக்கள் அவதிப்பட வேண்டியுள்ளதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி

## வேலணை கணபதிப்பிள்ளை கோவில் கும்பாபிஷேகம்

(வேலணை)

வேலணை மேற்கு பெரிய புலம் மகா கணபதிப்பிள்ளையார் கோவிலின் மகா கும்பாபிஷேக விழா எதிர்வரும் 11 ஆம் திகதி (11.4.90) புதன்கிழமை காலை 9மணி முதல் 10மணிக்குள் வரும் இடபலக்கின சுப முகூர்த்தத்தில் நடைபெறவிருக்கின்றது. (14)

## வீரகத்தி விநாயகர் மஹோற்சவம்

(வேலணை)

மண்கும்பான் வெள்ளைப் புற்றடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 6 ஆம் திகதி (6.4.90) வெள்ளிக்கிழமை பகல் 12.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்களுக்கு உற்சவங்கள் இடம்பெறவிருக்கின்றன. எதிர்வரும் 14 ஆம் திகதி (14.4.90) சனிக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறு தினம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 8.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவுடன் உற்சவங்கள் முடிவடையவிருக்கின்றன. (14)

தமிழ்த் தின கலைவிழா மருதமுனை ஷம்சுல் இல்ம் மகா வித்தியாலய திறந்தவெளி அரங்கில் நடைபெற்றபோது. பிரதம அதிதிகளில் ஒருவராக கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ மேற்கண்டவாறு கூறினார்.

கவிஞரும், அதிபருமான திரு. மு. சடாட்சரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. காஸ்ரோ தொடர்ந்து பேசுகையில், 'மருதமுனைக் கிராமத்தில் நடைபெறும் முஸ்லிம் - தமிழ் பாடசாலைகள் இணைந்து நடாத்தும் இக்கலை விழாவில் என்னைப் பிரதம அதிதியாக அழைத்துப் பேச சந்தர்ப்பம் தந்தமைக்கு எமது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பங்கு கொண்டமையைப் பார்க்கும்போது முஸ்லிம் - தமிழ் உறவுக்கு இக்கிராமமே ஒரு பாலமாகும் என்று சொல்லத் தோன்றுகின்றது. இப்படியான ஒற்றுமையும், பரஸ்பர நல்லுறவும் தொடர்ந்து நிலைக்கவேண்டும் என்றுதான் நாமும் போராடி வருகின்றோம்.

இவ்வாறான ஒற்றுமை நிலைக்கக் கூடாது என்று தீய சக்திகள் திட்டமிட்டு செயல்பட முயற்சிகள் எடுத்து வருகின்றன. இதனை முறியடிக்க வேண்டியது இங்குள்ள மக்களின் கடமையாகும் என்றும் அவர் கூறினார்.

ஏழு பாடசாலைகள் கலந்து கொண்ட இவ்விழாவில் கல்முனை கல்வி மாவட்ட கல்வியதிகாரிகள், கோட்டக் கல்வியதிகாரிகள் பலரும் பேசினர். (48)

## எமது போராட்டம்

# புலிகளினதும், மக்களினதும் இரத்தத்தால் செழுமைப்பட்டது

(கரவெட்டி)

பல நூற்றுக்கணக்கான விடுதலைப் புலிகளின் இரத்தத்தாலும், ஆயிரக்கணக்கான மக்களின் இரத்தத்தாலும் செழுமைப்படுத்தப்பட்ட எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் அடக்க முனைந்த வேளையில்தான் எமது யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திலீபனும், மட்டுநகர் தந்த தமிழீழத்தாய் அன்னையும் அகிம்சைவழிநின்று போராடி தியாக மரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளார்கள். இவர்கள் தமிழீழ மக்களின் மனங்களிலும் உலக வரலாற்றிலும் நிலையான இடத்தைப் பிடித்துள்ளார்கள். 'இவர்களே நாம் வணங்கும்தெய்வங்கள்.'

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயற்குழு உறுப்பினரும், கட்சி உப அமைப்பாளருமான திரு. செங்கதிர் வடமராட்சி மாணவர் இயக்கத்தினால் அன்னை பூபதி ஞாபகார்த்தமாக ஏற்பாடு செய்யப்பட்ட மௌன ஊர்வலத்தின் இறுதியில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

மாலிசந்தியில் இருந்து ஆரம்பமான இவ்மௌன ஊர்வலத்தில் வடமராட்சியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர். அஞ்சலிக் கூட்டத்திற்கு மாணவர் இயக்கத்தின் வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. செல்வம் தலைமை வகித்தார்.

திரு.செங்கதிர் தொடர்ந்து பேசுகையில்; எமது உரிமைகள் கிடைக்கும்வரை எமது பாதுகாப்பு அரணாகத் திகழும் ஆயுதங்களை யாரிடமும் கொடுக்கத் தயாரில்லை என்றார். (18)

தாயகத்தின் விடிவுக்காய்
தன்னுயிரைத்தானளித்த
அன்னையின் திருவடிக்கு
ஆயிரமாம் அஞ்சலிகள்

**மகேஸ்வரன்**

இல. 34, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்

B.708

**சு. அம்பலவாணர்**

சுன்னாகம்

B-710

**V. ஜெயபாலன்**

அரவிந்தன் றேடேர்ஸ்
எலெற்றிக்கல் சொப்

சுன்னாகம்

B-711

**வேல் அழகன்**

வலழகன் காட்வெயர் ஸ்ரோர்ஸ்
சுன்னாகம்.

B-7J2

# எங்கள் அன்னை பூபதி!

எங்கள் அன்னை பூபதியே
ஏற்பாய் கண்ணீர் அஞ்சலியே
உன்போல் தியாகி இது காறும்
இல்லை இல்லை உலகினிலே - எங்கள்

நெஞ்சில் இரக்கம் இல்லாத
நீச அரசின் கொடும் செயலால்
அஞ்சா நெஞ்சம் கொண்டவளே
அமர ரானாய் பாதியிலே
உண்ணா விரதம் இருந்தே நீ
உயிரைத் தந்தாய் தமிழுக்காய்
கண்ணீர் மழைதான் சொரிந்தாலும்
காண வருமோ உன்முகத்தை - எங்கள்

சாகும் வரையில் உண்ணாமல்
சத்தியம் காத்தாய் மண்மீது
வேகும் தீயில் உன்னுடலை
விடுத்தே சென்றாய் விண்ணுலகம்
ஈழ மண்ணில் நீ விட்ட
இறுதி மூச்சை உன்மைந்தர்
வீர மூச்சாய் கொண்டிங்கு
விரைவில் காண்பார் தமிழீழம் - எங்கள்

திலீபன் சென்ற வழியினிலே
தாயே நீயும் சென்றாயே
புலியின் வீரப் போரினிலே
புதிய சரித்திரம் கண்டாயே
வழியில் வயதில் சாகாமல்
வாழ்வைத் தியாகம் செய்தாயே
விழியில் என்றும் நீர்தேக்கி
விழுந்தே பணிவோம் உன்பாதம் - எங்கள்

- கே. கே. மதிவதனண் -

9, மாணிக்கவாசகர் வீதி,
திருக்கோணமலை.



தமிழீழ மண்விடிய
தானெரிந்து ஒளியானாய்
எமதிதய தெய்வமென
என்றென்றும் உயர்ந்துநிற்பாய்

**கி. பொன்னுத்துரை**

ஸ்வரா காட்வெயர்ஸ்

கே. கே. றோட்,
சுன்னாகம்.

B-715

**S. மகேஸ்வரன்**

இல 12, நியூ மார்க்கற்,
சுன்னாகம்.

B-719

**S. சிவபாதலிங்கம்**

சுன்னாகம்.

B-717

**சு. சபாநாயகம்**

இல. 14, நியூ மார்க்கற்,
சுன்னாகம்.

B-720

**ட. சதாசிவம்**

**தனலக்சுமி புத்தகசாலை**

சுன்னாகம்.

(B-713)

**த. இந்திரகுமார்**

**சுன்னாகம்**

(B-716)

பெண்ணிற் பெருந்தகையே
பெருமைமிகு தமிழ்த் தாயே
அன்னை பூபதியாம் ஒளிவிளக்கே
நின்றானுக்கு -
அஞ்சலிகள் செய்தோம்
அவனிதனில் நீ உயர்ந்தாய்

**அலெக்ஸ்சாண்டர்**

இல. 7, மத்திய சந்தை,

சுன்னாகம்.

B.709



# தியாகச் செம்மல் அன்னை பூபதி

*****************

பூதலத்தில் இன்று புகழ் பரப்பும் பூபதியே!
மாகளத்தில் உன் மகிமை மறக்க போமோ!!

மண்ணின் விடிவிற்காய் இன்னுயிர் நீத்த
கண்ணின் மணியான அன்னை பூபதியே!

மண்ணுயிர் காக்கவென்று உன்னுயிர் ஈந்த பூபதி
அன்னையே! இதயமதில் நீ இன்னும் இருக்கின்றாய்

காலத்தால் அழியாத புகழ் பெற்ற பூபதியே! - இதய
பாலத்தால் அழியாத இறவு உன் நினைவம்மா!

சிந்திப்போம் நின்று வந்திப்போம் - பூபதி அன்னையே!
முந்திப்போய் முழுநிலவாய் ஒளி வீசிடும் தாயே!!

காந்தி தேசம் தலை குனிந்திங்கு
திலீபன் வழி அன்னை தியாகத்தால்
காந்தி தத்துவம் என்று வந்தவர்
அன்னையை ஏனோ ?
மக்கள் புரட்சி வெடிக்கும் என்றான்
மக்களை வடநாட்டுக் குரங்குகள் அழிக்கும் நேரம்
தன்னுயிரை எமக்காக ஈந்த - அவள்
இலக்கியம் கண்ட தாயினு மேலாள்

(!) (!!) (!)

**சி. நே. நாதன்**

**தேவன் என்ரபிறைஸ்**

சுன்னாகம்.

B.721

**M. சுப்பிரமணியம்**

**சரஸ்வதி பான்ஸி ஹவுஸ்**

சுன்னாகம்.

B. 725

தியாகத் திருவிளக்கே
திசைபோற்றும் தமிழ்த்தாயே
உயிரை உவந்தளித்தாய்
உன் மண்ணின் விடிவிற்காய்

செந்தமிழின் நிலம்காக்க
உந்தனைநீ தந்திட்டாய்
எம்மிதயத் திருவிளக்காய்
என்றென்றும் திகழ்ந்திடுவாய்

**S. சிவஜோதிலிங்கம்**

இல 2, நியூ மார்க்கெட்,

சுன்னாகம்.

B.718

## சிந்தனைக்கு

நாடு காப்பதற்கே - உனக்கு
ஞானஞ் சிறிது முண்டோ - பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 09 - 04 - 90
தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2202

# பழைய பல்லவிதான்!

"இன்று நாம் பாதுகாப்புக்காக ஒரு துப்பாக்கியை வைத்திருக்க முடியாது. ஆனால் புலிகள் இயக்கத்தினர் பெருந்தொகை ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சட்டம்; எமக்கு வேறொரு சட்டமா? இந்த நிலை தொடர இடமளிக்க முடியாது."

இப்படிக் கூறியிருக்கிறார் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவியும் உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றவருமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா.

"பழைய குருடி கதவைத் திறடி" என்று பழைய பல்லவியைப் பாடத் தொடங்கியிருக்கிறார் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா. இவர் மட்டுமல்ல எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த சிலர் இந்தக் கோரஸ்ஸில் சேர்ந்திருக்கிறார்கள்.

1955 ஆம் ஆண்டில் அப்போது பிரதமராக இருந்த சேர் ஜோண் கொத்தலாவலை யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார்,

அவருக்கு கொக்குவிலில் அளிக்கப்பட்ட வரவேற்பில் உத்தியோக மொழியில் தமிழ் மொழியின் நிலை என்ன என்ற கேள்வியை ஹென்டி பேரின்பநாயகம் எழுப்பினார். சிங்களத்துடன் தமிழும் சம அந்தஸ்துடன் விளங்கும் என்று சேர் ஜோண் உறுதியளித்தார்.

அவர் கொழும்புக்குத் திரும்பிச் செல்லு முன்னரே எஸ் டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா தாம் ஆட்சிக்கு வந்தால் இருபத்திநான்கு மணி நேரத்தில் சிங்களத்தை அரியாசனத்தில் ஏற்றுவேன் என்று முழங்கினார்.

இடதுசாரி இயக்கத் தலைவர் என்று கருதப்பட்ட பிலிப் குணவர்த்தனா உட்பட எதிர்க்கட்சியினர் சிங்களமே நாட்டின் உத்தியோக மொழியென்றும் தமிழுக்கு இடமில்லை என்றும் கூச்சலிடத் தொடங்கினர்.

ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வரவேண்டுமென்றால் சிங்களம் மட்டும் கோஷம் எழுப்பப்பட வேண்டுமென விரும்பியது.

விளைவு; சேர் ஜோண் தாம் யாழ்ப்பாணத்தில் சம அந்தஸ்து பற்றிப் பேசவில்லையென்றார். களனியில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் சிங்களம் மட்டுமே நாட்டின் உத்தியோக மொழி என்று தீர்மானித்தது. இக் கட்சியிலிருந்து தமிழர்கள் வெளியேறினர்.

பண்டாரநாயக்கா தலைமையில் மக்கள் ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ் மொழிக்கு உரிமை கொடுக்கக் கூடாதென்பதில் போட்டி போட்டு வகுப்புவாதத்தைக் கக்கின.

பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தார். சிங்களம் மட்டும் மசோதாவைக் கொண்டு வந்து வடக்கு கிழக்கு மாகாண மக்களின் விருப்பத்துக்கு மாறாக நிறைவேற்றினார்.

இச் சமயத்தில்தான் இலங்கையில் தமிழர்கள் கொழும்பிலும் அம்பாறை இங்கினியாகலயிலும் தாக்கப்பட்டனர்.

தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கெதிரான வகுப்புத் துவேஷம் கட்டவிழ்த்து விடப்பட்டது. 1958 ஆம் ஆண்டில்

# ராஜீவ் தோல்வி அடைந்தபின் தமிழீழ இந்திய நட்புறவு மீண்டும் வளர்கிறது

நீண்ட நெடுங்காலமாக தமிழீழ மக்களுக்கு இந்தியாவின் மீது இருந்துவந்த நட்புணர்வுக்கும், நம்பிக்கைக்கும் ஊறு நேர்ந்துவிடக் கூடாது என்ற காரணத்துக்காகவே தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ விடுதலைக்காக நடத்திவந்த போராட்டத்தை இடை நிறுத்தி இந்திய அரசு இலங்கையோடு செய்து கொண்ட அமைதி உடன்படிக்கைக்கு-அது தமிழர் உடன்படிக்கையின் மூலம் சமாதானப் பிரியர் என்ற முகமூடியைப் போட்டுக் கொண்டு அதற்குள் தன் போபர்ஸ் கறையை மறைத்து விடலாம் என்ற நோக்குடனேயே ஈழப் பிரச்சினையிலிறங்கினர்.

### உண்ணாவிரதப் போராட்டம்

அந்நிலையைவிட விடுதலைப் புலிகள் ராஜீவ்வின் உடன்படிக்கையை துரிதமாக முறையாக நடைமுறைப் படுத்தும்படி இலங்கை அரசைத் தட்டிக் கேட்க ஒரு வாய்ப்பாக அந்தப் போராட்டத்தைப் பயன்படுத்தும்படி தான் இந்திய அரசை விடுதலைப்புலிகள் கேட்டுக் கொண்டனர்.

ஆனால், விடுதலைப் புலிகளின் இந்த நல்லெண்ண உணர்வுகளுக்கு சிறிதளவும் மதிப்பளிக்காத ராஜீவ் அரசு

**இந்திய - இலங்கை அமைதி உடன்படிக்கையால் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கு நன்மை எதுவும் கிடைக்கவில்லை. மாறாக ராஜீவ் காந்தி அமைதி உடன்படிக்கையில் உறுதி வழங்கப்பட்டிருந்த தமிழர்கள் நலன்களிலும் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. ராஜீவ் காந்தி அரசியல் அதிகாரத்தை இழந்த பிறகும் தமிழீழ - இந்திய நட்புறவு வளர்கிறது.**

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதுவிதத்திலும் உதவப் போவதில்லை உன்பதைநன்கு தெரிந்தபோதிலும் அதை எதிர்க்காமல் - ஒத்துழைப்பது என்ற முடிவுக்கு வந்தனர்.

இந்திய அரசின் முயற்சிக்கு மதிப்பளித்து விடுதலைப் புலிகள் இந்த முடிவை எடுத்தபோது தமிழீழ மக்களையும் இயக்க உறுப்பினர்களையும் மிகவும் சிரமப்பட்டு அமைதிப்படுத்த வேண்டியிருந்தது.

அமைதி உடன்படிக்கையினால் ஈழத் தமிழர்களுக்கு நன்மை எதுவும் கிடைக்காதபோதிலும் ராஜீவ் அரசின் முயற்சிக்கு ஒத்துழைப்புக் கொடுக்க முன்வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் நல்லெண்ணத்தை மதிக்காத ராஜீவ் அரசு, அந்த அமைதி உடன்படிக்கையில் உறுதி அளிக்கப்பட்டிருந்த தமிழர் நலன்களிலோ, இயக்கத்தின் பாதுகாப்பிலோ எதுவித அக்கறையும் காட்டவில்லை.

### அமைதி உடன்படிக்கை

இந்திய - இலங்கை அமைதி உடன்படிக்கைக்கு மதிப்பளித்து யுத்த நிறுத்தத்தை உறுதியாகக் கடைப்பிடித்து தம்மிடமிருந்த ஆயுதங்களில் பெரும் பகுதியை தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியப் படையினர் முன்னிலையில் ஒப்படைத்தனர். விடுதலைப்

அமைதி உடன்படிக்கையை எதிர்க்காது, இலங்கை அரசின் உடன்படிக்கை மீறல்களைத் தடுத்து நிறுத்தி உடன்படிக்கையைமுழுமையாகவும், துரிதமாகவும் நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்கும்படி கோரி இந்திய தேசபிதா மகாத்மா காந்தி காட்டிய வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தைத்தான் மேற்கொண்டனர்.

அந்த வேளையில் கூட, அந்த உண்ணாவிரதப் போராட்டம் இந்தியாவுக்கோ ராஜீவ் காந்தியின் அமைதி உடன்படிக்கைக்கோ எதிரானது அல்ல என்றும், அமைதி உடன்படிக்கைக்கோ எதிரானது அல்ல என்றும், அமைதி

அதன்பின் விடுதலைப் புலிகளைப் பழிவாங்கும் வகையிலேயே தொடர்ந்து செயற்பட்டு வந்தது.

★ இந்திய - இலங்கை அமைதி உடன்படிக்கையைக் காலந்தாழ்த்தாது முழுமையாக, துரிதமாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும்படி விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அமைதி வழியிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ராஜீவ் அரசு ஏளனம் செய்ததுடன், தனது பிரச்சார இயந்திரங்கள் அனைத்தையும் அந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கு எதிராக முடுக்கிவிட்டது. ராஜீவ் அரசின் பாராமுகத்தினால் அன்று வீரமறவன் திலீபன் சாகடிக்கப்பட்டான்.

★ திலீபனின் தியாக மரணத்தின் பின்பும் கூட விடுதலைப் புலிகளின் தலைவர் பொறுமையை இழக்காது, இந்திய அதிகாரிகளோடு அமர்ந்து பேசி தற்காலிக நிர்வாகத்தை இயக்கம் ஏற்று நடத்துவதற்கு ஒப்புக் கொண்ட போதிலும்கூட, அதற்கான உறுப்பினர்களை நியமிக்கும் விடயத்தின் விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளின் படி இந்திய அதிகாரிகள் செயற்படத் தவறியது மட்டுமல்ல 'விடுதலைப் புலிகள் தான் முரண்டு பிடிக்கிறார்கள்' என்று விடுதலைப் புலிகள்மீது பழியைப் போட்டனர்.

★ அமைதி உடன்படிக்கைக்கு மதிப்பளித்து ஆயுதங்களை ஒப்படைத்த விடுதலைப் புலிகளை வேட்டையாட, ஏனைய குழுக்களுக்கு மறைமுகமாக ஆயுதங்களைக் கொடுத்து களத்திலிறக்கிய ராஜீவ் அரசு, அதுபற்றி விடுதலைப் புலிகள் கொடுத்த புகார்களை நிராகரித்ததுடன், விடுதலைப் புலிகள் தான் ஏனைய குழுக்களை அழிக்கின்றார்கள் என்ற பொய்ப் பிரச்சாரத்தையும் திட்டமிட்டு மேற்கொண்டது.

(தொடரும்)

# பொதுத்துறை நிர்வாக அமைப்பு கவனிக்குமா

ஆசிரியர்
ஈழநாதம்.

1989 இல் அரசாங்கம் வெளியிட்ட இரண்டு சுற்று நிருபங்கள், அரச ஊழியர்களுக்கு இரண்டாம் மொழித்தேர்வுக்கான 'அலவன்ஸ்' வழங்குவதையும், பயங்கரவாத வன்செயல் இழப்பீட்டுக் கொடுப்பனவையும் பற்றி விபரங்களைத் தந்து நிற்கின்றன.

இவ்விரண்டு விடயங்கள் தொடர்பாகவும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களைச்

மேல் பாண்டித்தியம் பெற்றவர்களுக்கு மேலதிக ஊக்கிவிப்புப் பணம் வழங்குவதைப் பற்றியும், அதனை நடைமுறைப்படுத்தும் முறையையும் விபரிக்கிறது. இச்சுற்று நிருபத்துக்கு இப்பொழுது ஒரு வயதாகிறது.

ஆனால் இது சம்பந்தமான எவ்வித நடவடிக்கைகளும் எடுத்ததாகத் தெரியவில்லை. இந்நிருபம் வெளியிடப்பட்ட சில தினங்களுக்குத்

# தமிழ் மொழித்தின போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்மொழித்தினப் போட்டிகளில் முதலாம் பிரிவு பாஒதலில் கோழும்புத்துறை துரையப்பா வித்தியாலய மாணவன் செல்வன் ம. பிரபாகரன் முதலிடம் பெற்றுள்ளார்.

இதே வித்தியாலத்தைச் சேர்ந்த செல்வன். அ. அமலதாஸ் மூன்றாம் பிரிவுக் கட்டுரைப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர்கள் இருவரும் யாழ். தெற்கு கொத்தணிப் போட்டிகளில் முதலிடம் பெற்றுக் கொண்டவர்கள் என்பது

# ஊர்சுற்றி

எழுதுவது

இந்திய இராணுவம் வடக்கிலும் கிழக்கிலுமிருந்து வெளியேறத் தொடங்கியதும் கடைசிக் காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களை இப்போது நினைத்தாலும் நெஞ்சம் பதறுகிறது என்று ஒரு அன்பர் கூறினார்.

வேறு அலுவலாக வந்து சாதாரணமாகச் சில நியாயங்கள்பேசிக்கொண்டிருந்தவரிடம் "உங்கள் வீட்டிலும் கொள்ளை அடிக்கப்பட்டதாம், உண்மையா?" என்று நண்பர் கேட்டார்.

இந்தக் கேள்வியைக்கேட்டதுதான் அந்த அன்பரின் முகம் பேயறைந்தது மாதிரி மாறி விட்டது.

இந்திய இராணுவம் இப்பகுதியில் பாதுகாப்பாக சுற்றி வர நிற்க அவர்கள் கூட்டி வந்த ஆயுதக் கும்பல்களை வீடுவீடாக நுழைந்து கொள்ளையிட்டது. எனது வீட்டில் இரண்டுதடவைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

முதல் தடவை கொள்ளையடித்தவர்கள் தாலியைத் திருப்பிக் கொடுத்து விட்டுப் போனார்கள் இரண்டாவது தடவை வந்தவர்கள் தாலி கோர்க்கப்பட்டிருந்த சங்கிலியுடன் தாலியையும் பிடுங்கிச்சென்றார்கள்.

இது மட்டுமா சின்னக் குழந்தையின் வாயில் துப்பாக்கியை வைத்தபடி "உனக்குஅப்பா வேணுமா பணம் வேணுமா?" என்று கேட்டு அப்பா வேணுமென்றால் பணத்தை எங்களிடம் கொடுக்கச் சொல்லு அப்பாவை" என்று மிரட்டினார்களாம்.

இன்னும் அந்தக் குழந்தை அதிர்ச்சியிலிருந்து சரியாக மீள வில்லையாம்!

வீட்டுக்காரரின் மார்பின் மீது துப்பாக்கியைக் குறி வைத்தபடி ஒருவன் நிற்க மற்றவர்கள் பெண் பிள்ளைகளின் கழுத்திலும் காதுகளிலுமுள்ள நகைகளைக் கழற்றி வாங்கிக் கொண்டார்கள்

வீட்டுக் காரரின் நெஞ்சுக்கு நேரே பிடித்திருந்த துப்பாக்கியை மேல் நோக்கி சுட்டவராம். இன்னமும் அந்த அடையாளம் நினைவுச் சின்னமாக வைத்திருக்கிறார்

துவேஷம் கட்டவிழ்த்து விடப்பட்டது. 1958 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் இனக்கலவரம்; தென்னிலங்கையிலிருந்து தமிழர்கள் கப்பலில் அகதிகளாக வடக்கு கிழக்குக்கு அனுப்பப்பட்டனர்.

பண்டாரநாயகாவின் கொலைக்குப் பின் 1960 ஆம் ஆண்டு ஜூலை தேர்தலிலும் சிறிமா தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் டட்லி தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழர்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்கப் போகிறார்கள் என்று பரஸ்பரம் குற்றம் சாட்டி துவேஷப் பிரசாரம் செய்தனர். சிறிமா ஆட்சிக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

1961 ஆம் ஆண்டில் தமிழ் மக்களின் உரிமைக்காக தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கில் அகிம்சை முறையில் போராட்டம் நடத்தியது.

இப்போராட்டத்துக்கு எதிராக தேசபக்தர்கள் ஒன்றுசேர வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட சிறிமா அம்மையார் அகிம்சைப்போராளிகள்மீது ஆயுதப்படைகளை ஏவிவிட்டு அடக்கினார்.

1965 ஆம் ஆண்டுத் தேர்தலிலும் வகுப்புத் துவேஷம் கக்கப்பட்டது. டட்லி ஆட்சிபீடத்துக்கு வந்து 'தேசிய அரசாங்கம்' அமைத்த பின் சிறிமாவுடன் சேர்ந்து இடதுசாரிகளும் 'மசாலவடை' கோஷம் எழுப்பி துவேஷத்தைப் பரப்பினர்.

இப்படித் தேர்தலுக்குத் தேர்தல் இனத் துவேஷத்தைக் கிளப்பி ஆட்சிபீடத்துக்கு வருவது சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகளுக்கு கைவந்த கலையாக இருந்தது, இதற்கு சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகள் பேருதவியாக இருந்தன.

1970 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த சிறிமா அம்மையார் புதிய அரசியலமைப்பை உருவாக்கிய சமயத்திலும் தமிழ் மக்களை முற்றாகப் புறக்கணித்தார். தமிழ் மாணவர்களுக்கு எதிராகத் தரப்படுத்தலும் கொண்டு வரப்பட்டது.

1977 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தவர் 'எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றிய மாதிரி' "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" என்றார்.

1977, 1983 ஆம் ஆண்டுகளில் கலவரம் வெடித்தது; போர் தொடங்கியது. தமிழ் இளைஞர் ஆயுதம் ஏந்தினர்.

போரை ஜே. ஆர். அரசு சமாளிக்க முடியவில்லை.

இன்று விடுதலைப் புலிகள் பலம் வாய்ந்த சக்தியாக மக்களின் பாதுகாப்புக்கு மக்களின் ஆதரவுடன் உத்தரவாதமளித்துக் கொண்டிருக்கின்றனர்.

சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கும் சிங்களப் பேரினவாதிகளுக்கும் விடுதலைப் புலிகள் சிம்ம சொப்பனம்!

பாவம்; அவர்கள் இப்படித்தான் ஏதாவது உளறிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் வாயை அடைக்கும் பொறுப்பு அரசாங்கத்தையும் தென்னிலங்கை மக்களையும் சார்ந்தது!

இனியும் இதைத் துவேஷத்தைக் கிளப்பி ஆட்சிக்கு வர முடியுமென்று சிறிமா அம்மையார் நினைத்தால் அவருக்காக அனுதாபப்பட வேண்டுமேயன்றி வேறென்ன செய்ய முடியும்.

ஒப்படைத்தனர். விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து, யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்த அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை அரசு முன்னெப்பொழுதும் இல்லாத அளவு சிங்களக் குடியேற்றங்களை தமிழர் பாரம்பரிய நிலங்களில் வேகமாக ஏற்படுத்தியது. இந்திய அரசினால் ஊட்டங் கொடுத்து வளர்க்கப்பட்ட ஏனைய குழுக்கள் ஆயுதமேந்தி விடுதலைப் புலி இயக்க வீரர்களை வேட்டையாடினர். உடன்படிக்கையின்படி சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களையும், விடுதலைப் புலிகளையும் விடுவித்திருக்க வேண்டிய இலங்கை அரசு அதற்கு மாறாக உடன்படிக்கையை மீறி இயக்க இளைஞர்களைக் கைது செய்து வந்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம், பாதுகாப்பு என்ற பெயரில் தமிழ் பகுதிகளில் இழந்து விட்டிருந்த தனது நிர்வாகத்தை மீண்டும் நிலைநிறுத்தும் நடவடிக்கைகளில் ராஜீவ் அரசு இறங்கியது.

கைகள் கட்டுண்ட நிலையில் இவற்றையெல்லாம் விடுதலைப் புலிகள் இந்திய அரசுக்கு பல தடவைகள் சுட்டிக் காட்டியபோதிலும் இந்திய அரசு அதற்குச் செவி சாய்க்கவில்லை.

ராஜீவ் அரசுக்கு மதிப்பளித்து ஆயுதங்களை விடுதலைப் புலிகள் ஒப்படைத்த போது தமிழினத்தினதும், இயக்கத்தினதும் பாதுகாப்புக்கான முழுப் பொறுப்பையும் இந்திய அரசே மேற்கொள்ள வேண்டுமென்று உறுதியாகக் கூறியிருந்தனர்.

ஆனால், இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு உண்மையிலேயே சிறிதளவு கூட ஈழத் தமிழரின்பால் அனுதாபமோ அன்றி ஈழப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற ஆர்வமோ கொஞ்சம் கூட இருக்கவில்லை. அவர் இந்திய - இலங்கை அமைதி

கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ் ஊழியர்கள்

## மக்கள் மடல்

இருட்டு வீட்டில் கறுத்தப் பூனை பிடிக்கும் கதைக்கொப்பாகித் தவிக்கின்றனர். இலாகாக்களின் தலைவர்களிற் பெரும் பாலானோர் இச்சுற்றறிக்கை கிடைக்கவில்லையென்றும், தங்களுக்கு இவ்விடயங்களைச் செயற்படுத்த முடியவில்லையென்றும் சொல்கின்றனர்.

இவை பற்றி முழு விபரங்களாவன:- தீர்வுகாண முடியாத அல்லது தீர்வொன்றைக் காணும் நோக்கமற்ற அரசியல், பிரச்சினை தோன்றும் பொழுது, இதிலிருந்து இலகுவாகக் கைசழுவுவதற்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு சிறந்த வழி ஆணைக்குழுவொன்றை நியமிப்பதுதான். அண்மைக் காலங்களில் இலங்கையில் மட்டுமல்ல, பல்வேறு வளர்முக நாடுகளில் கையாளப்படும் ஒரு உபாயமாகவே இது தோன்றுகின்றது. நாமறிந்த அளவில் எத்தனையோ சிக்கலான பிரச்சினைகள் இவ்வாறு கைசழுவப்பட்டு உறக்க நிலையில் உள்ளன.

இச்சாயலைக் கொண்டு உத்தியொன்றை பொதுத் துறை நிருவாக அமைச்சும் கையாளத் தொடங்கியுள்ளதோ எனத் தோன்றுகிறது. இவ்வமைச்சினால் அண்மைக் காலங்களில் வெளியிடப்படும் சுற்று நிருபங்கள் பல சுற்றித் திரியும் நிருபங்களாக மட்டுமே உள்ளனவே தவிர அவை சார்ந்த எந்த நடைமுறையும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணப் பிரதேசங்களில் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. உதாரணத்துக்கு, 38/89 ஆம் இலக்க சுற்று நிருபத்தையும் 49/89 ஆம் இல. சுற்று நிருபத்தையும் எடுத்துக்கொள்ளலாம். 38 / 89 சுற்று நிருபம் ஒரு மொழிக்கு

தொடர்ந்து வானொலியிலும் காட்சி வானொலியிலும், பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் கொடுக்கப்பட்டன. ஒரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட நபரை இன்னொரு மொழியைப் படிக்க வைக்கும் கட்டாயம் அவசியம் இல்லை. எல்லோரும் மனமுவந்து படிப்பார்கள் என ஹேஷ்யங்களும் கூறப்பட்டன. ஆனால் திணைக்களத் தலைவர்களோ தங்களுக்கு இது பற்றி மேற்கொண்டு எதுவும் தெரியாது எனக் கூறுகிறார்கள். 49/89ம் இலக்க சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ள, ஒன்றரை இலட்சம் ரூபாவரையிலான பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு வழங்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள நட்டஈடு யாரால் யாருக்கு வழங்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. என்பது சரியாக புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது. அந்நிருபத்தில் கூறப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை சந்தித்து வினவும் பொழுது ஒரு கேலிப் புன்னகையுடனான பதிலே கிடைக்கிறது. ஏனெனில் அவர்களுக்கு அது சம்பந்தமான விபரங்கள் தெரியவில்லை.

மக்கள் பைத்தியக்காரர்களா, அல்லது மக்களைப் பைத்தியக்காரர்களாக்கும் ஒரு சூழ்ச்சி நடைபெறுகிறதா? அல்லது குறித்த ஒரு சிலரின் நன்மைகளை மாத்திரம் மனதில் கொண்டு வெளியிடப்பட்ட சுற்று நிருபங்களா இவையென எண்ணத் தோன்றுகின்றது.

செய்வதறியாது, தத்தளிக்கும் அரச ஊழியர்களுக்கு பொதுத்துறை நிருவாக அமைச்சு விளக்கமளிக்குமா?

பிரகாசம்

அம்பாறை.

குறிப்பிடத்தக்கது. (24)

## தேர்த் திருப்பணிச் சபை

திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தின் இவ்வாண்டுக்கான (1990-1991) திருப்பணிச்சபை நியமிக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக இளைப்பாறிய ஆசிரியர் திரு. சுந்தரம் பிள்ளை ராசநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். 1989 இல் தெரிவான தேர்த்திருப்பணிச் சபை கலைக்கப்பட்டுவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வல்வெட்டித் துறையில் விற்பனை நிலையம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வல்வெட்டித்துறையில் இரும்பு விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்து வைத்துள்ளது.

இப்பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குனர் சபைத் தலைவர் திரு. எஸ் காந்திதாஸன் தலைமையில் இப் நடைபெற்ற இத் திறப்பு விழாவின் போது இப் பலநோக்குக் கூட்டுறவச் சங்க களஞ்சியத் தொழிலாளி புதிய இரும்பு விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்தார்.

இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வல்வெட்டித் துறையில் மக்கள் விற்பனை நிலையமொன்றையும் திறந்து வைக்கவுள்ளதாகவு சங்க இயக்குநர்சபை தெரிவித்துள்ளது இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பருத்தித் துறைச் சந்தையில் அண்மையில் மக்கள் விற்பனை நிலையமொன்றையும் திறந்து வைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (25)

கிறார் வீட்டுக் காரரான வங்கி முகாமையாளர். இவரது மைத்துனரை நையப் புடைத்தவர்கள் வீட்டுக்காரருக்கும் கன்னத்தில் இரண்டு அறை அறைந்து அவருடைய மோதிரங்களையும் கைக்கடிகாரத்தையும் கழற்றிக் கொண்டு சென்றனராம்.

இது ஒரு வீட்டுக் காரரின் அனுபவம் இப்படி எத்தனை பேர் பட்ட துன்பமும் துயரமும்சொல்லிமாறாது!

இந்த அக்கிரமங்கள் அநியாயங்களின் விளைவு தான்அகதிகளாய்ப்போயும் நிம்மதியாக இருக்க முடியாமல் நாய் படாப்பாடு படுகிறான்கள் என்று ஒரு பெண் உரத்துச் சொன்னாள்.

இன்னமும் தமிழ் மக்களுக்காக அக்கரையிலிருந்து போராடப் போவதாகவல்லவா சொன்னாங்கள் என்று மற்றொருவர் சொல்லவும் சொன்னவருக்கே அட்ரஸ் இல்லை என்று அந்தப்பெண் சொன்னாள்!

★ ★ ★

அட்டாளைச்சேனையிலிருந்து நேற்று நண்பகல் ஒரு அன்பர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்தில் என்ன விசேஷம் நிலைமை எப்படி? என்று கேட்டார்.

இங்கு விசேஷம் எதுவுமில்லை. நிலைமை வழமை போல் என்றேன்.

உங்களுக்கு முதலே எங்க பகுதியில நிலைமை சீராகி விட்டது. இப்பொழுது இரண்டு நாளாக நல்ல மழை என்று அந்த அன்பர் மகிழ்ச்சியும் திருப்தியும் கலந்த குரலில் சொன்னார்.

ஈழநாதம்

## வீதி ஒழுங்கு பற்றி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இன்று பிற்பகல் 2 30 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். மாநகர வீதி ஒழுங்குகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் சென்.ஜோன் அம்புலன்ஸ் பிரிவின் சகல அங்கத்தவர்களையும் மற்றும் இப்பணியில் ஈடுபட்டுள்ள மன்ற ஊழியர்களையும் யாழ். மாநகரசபைஆணையாளரால் அழைக்கப் பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

# 1948 இல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது

# ஆனால் தமிழருக்குகிடைக்கவில்லை

(தீவுப்பகுதி)

1948 ஆம் ஆண்டு நாடு அன்னியராட்சியிலிருந்து சுதந்திரம் கிடைத்ததாக கூறப்பட்டு வருகின்றது. ஆனால் தமிழ் மக்களாகிய எமக்கு இதுவரை பூரண சுதந்திரம் கிடைக்கவில்லை. நாம் எமது சுதந்திரத்திற்காக, பூரண விடுதலைக்காக 1948 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை போராட்டங்களை நடாத்தி வருகின்றோம்.

மேற்கண்டவாறு மண்டைதீவு சிறுபுலம் மைதானத்தில் திரு. இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணியைச் சேர்ந்த செல்வி சோபிகா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி தீவக அரசியல் முக்கியஸ்தர் திரு. நரேஸ் உரையாற்றுகையில் எமது கலை. கலாசாரங்களை, எமது எமது பாரம்பரியங்களை கடைப்பிடித்து போராட்ட உணர்வுகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்லக்கூடிய கலை இலக்கிய வடிவங்களைப் படைக்க வேண்டும் என்றார்.

மக்கள் முன்னணியின் தீவக அரசியல் பொறுப்பாளர் திரு வி. கஸ்ரோ இங்கு உரையாற்றுகையில் அன்னை பூபதியின் இலட்சியமானது இன்று நிறைவேறிவிட்டது முதலாவதாக எமது மண்ணை விட்டு இந்தியப்படை வெளியேறிவிட்டது இரண்டாவது வடக்கு கிழக்கில் வாழும் தமிழில் மக்கள் ஒருவெகு சனப் போராட்டத்தை கட்டியெழுப்பி முன்னெடுத்து வருகின்றார்கள் இந்தவகையிலே வடக்கு கிழக்கு பகுதியிலே வாழும் தமிழ் பேசும் மக்கள் யாவரும் மக்கள் முன்னணியில் இணைந்து போராடி எமது லட்சியத்தை வென்றெடுக்க வேண்டும் என்றார். மற்றும் பலரும் உரை நிகழ்த்தினார்கள் இக்கூட்டத்திற்கு பெருந்தொகையான மக்கள் வருகை தந்திருந்தனர். (15)

## ஜெயந்திநகர்

## வேலையற்ற இளைஞர்களுக்கு 1 லட்சம் ரூபா கடனுதவி

(கிளிநொச்சி)

வேலை அற்றிருக்கும் ஜெயந்திநகர் இளைஞர் யுவதிகள் சுயதொழில் மூலம் வருவாயைப் பெற்றுக்கொள்ள ஒரு இலட்சம் ரூபாவை கடனாக வழங்க ஆவன செய்வேன்.

கிளிநொச்சிஜெயந்திநகருக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் மேற்படி கிராம மக்கள் முன் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில், கிராம அபிவிருத்திச் சங்கம் இங்குவாழும் குடும்பங்களில் மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த, வேலையற்ற 20 இளைஞர், யுவதிகளுக்கு எம்மால் வழங்கப்படும் ஒரு லட்சம் ரூபாவை வழங்கி, அவர்களை சுய தொழில் செய்து சம்பாதிக்க ஆவன செய்ய முடியும்.

தாம் பெற்ற கடனை இளைஞர், யுவதிகள் திருப்பி வழங்கும்போது 4 வீத வட்டியுடன் வளங்கவேண்டும். வட்டிப்பணத்தை கிராம அபிவிருத்திச் சங்கம் பெற்று அச்சங்கத்தை வளர்க்க முடியும்.

திரு. நோபட் மரியதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. ரி. எஸ். தர்மசிங்கம் திருமதி மல்லிகா கந்தசாமி ஆகியோரும் பேசினர்.

## வடக்கு கிழக்கு புனரமைப்பு

## திருமலையில் அரச அதிகாரிகள் 21 ஆம் திகதி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலையில் இம்மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளை திட்டமிடுதல் தொடர்பான கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க அதிபர்கள் கலந்து கொள்வார்கள்.

இதில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிறட்டும்கலந்து கொண்டு யாழ். மாவட்ட புனர்வாழ்வு நடவடிக்கைகள் பற்றி எடுத்துக் கூறுவார் (லோ)

## 16 மைல் . . .

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

டைந்தது ஐநூறுபோராளிகள் இப்போட்டியில் கலந்து கொண்டனர். இவ்வைபவத்திற்கு அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் கருணா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இப்போட்டியில் அருள் முதலாமிடத்தையும், ரமேஷ் இரண்டாமிடத்தையும், மொறாயஸ் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

## டாக்டர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை அனுபவித்து வருகின்றனர்.

சங்கானை, கொட்டைக்காடு, காரைநகர், பண்டத்தரிப்பு என்பனவே இந்தநான்கு பெரிய ஆஸ்பத்திரிகளாகும்.

இது குறித்து இப்பகுதி மக்களும், பொது அமைப்புக்களும், ஆஸ்பத்திரி அபிவிருத்தி சங்கங்களும் மேலிடத்துடன் தொடர்பு கொண்டும் இதுவரையும்எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

காரைநகர் ஆஸ்பத்திரியிலிருந்த ஒரு டாக்டர் அண்மையில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

## டானியல் நினைவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவலர் மண்டபத்தில் நேற்று எழுத்தாளர் டானியல நினைவு தினக் கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்திற்கு டானியலின் மகள் தாரகா டானியல் உட்பட பல எழுத்தாளர்களும் அறிஞர்களும உரையாற்றினர்.

இக் கூட்டத்திற்கு யாழ் பல்கலைக்களக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ் சிவலிங்கராசா தலைமைதாங்கினார்.

## புகையிரத சாரதி இன்மையால் யாழ்ப்பாணத்திற்கு எரிபொருள் இல்லை!

(அனுராதபுரம்)

யாழ்ப்பாணம் வருவதற்காக எரிபொருள் ஏற்றிய புகையிரதம் சாரதிகள இல்லாமையால் அநுராதபுரத்தில் தரித்து நிற்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப் புகையிரதக் கொள்கலன்களின் ஒரு லட்சம் லீற்றர் பெற்றோலும், ஒரு லட்சம் லீற்றர் டீசலும், 40 ஆயி லீற்றர் மண்ணெண்ணெயும் உள்ளதாகத் தெரிகின்றது. இச் சாரதி இல்லாத விடயம் தமிழ்ப் பகுதிக்கு எரிபொருள் வழங்குவதில் புகையிரதப் பகுதியினருக்கு உள்ள அசமந்தப் போக்கையே காட்டுகின்றது. அதேவேளை இன்று பிற்பகல் இவ் எரிபொருட்கள் வந்து சேரலாம் எனத் தெரிகின்றது.

## இலங்கை வங்கி கிளைகளில் இன்று வழங்கப்படவுள்ள மீளக்குடியமர்தல் நிவாரணம்

புனர் வாழ்வு அமைச்சின் நிவாரணம் இன்று 9 ஆம் திகதி திங்கட்கிழமை கீழ் வரும் இலங்கை வங்கிக்கிளைகளில் வழங்கப்படவுள்ளது.

பருத்தித்துறை - பருத்தித்துறை கிழக்கு, குடத்தனை கரையூர், அல்வாய் வடக்கு.

காங்கேசன் துறை - அளவெட்டி கிழக்கு, மல்லாகம்.

ஆஸ்பத்திரி வீதிக்கிளை - மாசியப்பிட்டி, சங்கானை வடக்கு, சில்லாலை.

நெல்லியடி - அல்வாய் தெற்கு.

## கொழும்பில்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் இசதீன் கொழும்பில் பத்திரிகையாளருக்குத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மாகாணசபை கலைக்கப்படுவதை முஸ்லிம் காங்கிரஸ் முற்றாக எதிர்ப்பதாகவும், உறுப்பினர்களின் கருத்தைஅறியாமல் மாகாணசபையை கலைப்பதை அனுமதிக்க முடியாது என்றார்.

## நஷ்ட ஈடு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் தாம் இதனைச் செய்யப் போவதில்லைஎன மட்டக்களப்பு விமானப் படையைச் சேர்ந்த கேணல் ரணவீர தெரிவித்தார்.

அதேவேளை மட்டக்களப்பு விமான நிலையத்தை விஸ்தரிப்பதற்கான சிலநடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போது இதனைப்பற்றி விடுதலைப் புலிகள் தொடர்பு கொண்டபோதே இவ்வாறு தெரிவிக்கப் பட்டது.

## எமது...,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முருகையன் நிகழ்த்தினார். இந்நூல் வெளியீட்டு விழாவில் திரு. பொன். பூலோகசிங்கம், திரு. வரதன், செல்வி மணிமேகலை, திரு. கந்தசாமி. திரு, குகன், திரு. இளையகுட்டி, செல்வி சித்ரா ஆகியோர் உரையாற்றினார்கள்.

இறுதியாக விடுதலைப் புலிகள மக்கள் முன்னணி யாழ். மாவட்டஅமைப்பாளர் திரு. ராஜன் நன்றியுரையில் மறைந்த திரு. திருஞானசேகரம் அவர்கள் மாற்று இயக்கமான

## மாகாணசபை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

த்தைகள் இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இப்பேச்சுவார்த்தையில் திருமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் ரூபனும், மட்டக்களப்பு மாவட்ட அரசியற் பொறுப்பாளர் கரிகாலனும் கலந்து கொள்வார்கள் எனத் தெரிய வருகின்றது. அதே வேளை திருமதி பாலசிங்கம் கலந்துகொள்ள மாட்டார் எனத் தெரிகின்றது.

இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேறிய பின் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறும் இப்பேச்சுவார்த்தைகள் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

## யாழ். செயலகத்தில் பெண் சிற்றூழியர்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் முன்னொரு போதும் இல்லாதவாறு சிற்றூழியர் பதவியில் பெண் உத்தியோகஸ்தர் ஒருவர் சேவையாற்றி வருகிறார்.

இவர் கடந்த பல மாதங்களாக யாழ் செயலகத்தில் இப் பதவியில் இருந்து வருகிறார் வேறு ஒரு பதவிக்கு நியமனம் கோரி வந்த இவரை அதிகாரிகள் இப்பதவியில் அமர்த்தியுள்ளனர் என தெரியவருகிறது. (லோ)

## அன்னை பூபதி நினைவாக சாவகச்சேரியில்சிரமதானம்!

(சாவகச்சேரி)

உண்ணாவிரதமிருந்து தன்னுயிரைத் தியாகம் செய்த அன்னை பூபதியின் நினைவாக

தொண்டர்களும், ஆதரவாளர்களும் இச்சிரமதானப் பணியில் கலந்து கொண்டனர்.

## தனியார்...

**திரைப்பட அரங்கு உரிமையாளர்களுக்கு**

யாழ். மாவட்டத்திலுள்ள சகல திரைப்பட அரங்கு உரிமையாளர்களையும் மினிசினிமா உரிமையாளர்களையும் 1990 - 04 - 11 (புதன்கிழமை) காலை 10 மணிக்கு "நிதர்சனம்" தலைமை அலுவலகத்தில் தவறாது சமுகமளிக்கும்படி

தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகள், ஆதரவாளர்கள், தொண்டர்கள் கூடி மாபெரும் சிரமதானப் பணி ஒன்றினை ஒரு நாள் முழு நாளும் சாவகச்சேரியில் மேற்கொண்டனர்.

சாவகச்சேரி அரச வைத்திய சாலையில் 5ஆம் திகதி வியாழனன்று காலை முதல் மாலை வரை இந்த சிரமதானப்பணி இடம்பெற்றது. 200க்கும் அதிகமான தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகளும்

சாவகச்சேரி அரசாங்க வைத்தியசாலை கட்டிடங்கள், படுக்கைகள் ஆகியவற்றிக்கு மையூசல், வளவினுள் உள்ள மரம், செடி, கொடி, புல், புதர்களைத் துப்பரவு செய்தல், பாவிக்க முடியாத நிலையிலிருந்த மலசலகூடங்களை துப்பரவு செய்தல் போன்ற நோயாளரின் சுகாதார நலன் பேணும் சிரமதானப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன.

# யாழ். பத்திரிகையாளருக்கு விரைவில் இலவசமினிபஸ்பாஸ்

(சுதுமலை)

யாழ். மாவட்டத்திலுள்ள பத்திரிகையாளர்களுக்கு இலவசமாகமினிபஸ்களில் பயணம் செய்வதற்கு வடபிராந்திய தனியார் மினிபஸ் சங்கம் ஆராய்ந்து வருகிறது.

அண்மைக்காலங்களில் இந்தப் பத்திரிகையாளர்கள் பட்ட கஷ்டங்களை அடுத்து இவர்களுக்கு இந்தச் சலுகைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதுதொடர்பாகபத்திரிகை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உற்சாகமாக உழைத்து வரும் பத்திரிகையாளர்கள், நிருபர்களின் பெயர்ப் பட்டியல்கள் சேகரிக்கப்பட்டு இதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வடபிராந்தியமினிபஸ்சங்கங்களின் சமாசத் தலைவரும்,வடபிராந்திய மினிபஸ் சங்கத்தலைவருமான திரு. பொன். மதிமுகராசா ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

இந்த திட்டம் முன்னர்அமுல்படுத்த பட இருந்தபோதிலும், அண்மைக்கால சம்பவங்களால் அதனை நடைமுறைப் படுத்த முடியவில்லை என மினிபஸ் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## குதிரையோடிய 32 பேர் மாட்டினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்து பரீட்சை எழுதவந்து இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் அகப்பட்டுக் கொண்டனர். இவர்கள் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர். நிந்தாவூர்ப்பகுதியிலுள்ள ஒரு பரீட்சை நிலையத்தில் இச் சம்பவம் இடம் பெற்றது. இவர்களில் ஒருவர் முஸ்லிம். மற்றவர் சிங்களவர்.

க. பொ. த. சாதாரண பரீட்சையில் குதிரையோடிய (ஆள் மாறாட்டம்) முப்பத்திரெண்டு பேர் விடுதலைப் புலிகளிடம் அகப்பட்டனர். (37(

மதிக்க முடியாது என்றார்.

73 உறுப்பினர்களைக் கொண்ட வடக்கு - கிழக்கு மாகாணசபையில் 55 ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. டி. எல். எவ். உறுப்பினர்களும், 17 ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் ஒரு யு. என். பி. உறுப்பினரும் அங்கம் வகித்தார்கள்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா வடக்கு - கிழக்கு மாகாண சபையின் யாப்பு அம்சங்களை தற்சமயம் ஆழ்ந்து கவனித்து வருகிறார் எனத் தோட்டத்துறை பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜெரெட்னா அவர்கள் வியாழன் மந்திரிச் சபைக் கூட்டத்தின் பின் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார். இவ்வாறு ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

## யாழ்ப்பாணத்தில்'..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடைக்காரர்கள் வாடிக்கையாளர்களை கவருவதற்காக பொருட்களைக் குறைத்து விற்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தென்பகுதியில் ஜே. வி. பி. பிரச்சினைகளால் இந்திய மருந்து வகைகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவியது ஆனால் தற்போது அந்த நிலையிலிருந்து இருபத்தைந்து சதவீதம் முன்னேற்றம் கணப்படுகிறது என்றும் அவர் கூறினார். (லோ)

## ரயில் சேவையை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கப்பட்டு, நவீனமயமாக்கப்படவுள்ளது. இதற்காக வருடம் தோறும் அறுபதாயிரம் கொங்கிறீட் சிலிப்பர் கட்டைகள் தயாரிக்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்திற்கு இருபத்தாறு கோடி ரூபா செலவு ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## தனியார்...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில அனுமதிபெற்ற எரிபொருள் நிலையங்களின் முன்பாக வாகனங்கள் கியூ வரிசையில் காணப்பட்டன.

ரயில் மூலம் எரிபொருள் வருகின்ற போதும் இந்த தட்டுப்பாடு நிலவுவதால் தனியார் மினிபஸ் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

## இரசாயன...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார், அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ்த் தொழிலாளர்கள் பல்வேறுபட்ட தொழிச்சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அத்தொழிற்சங்கத் தலைவர்கள் இத்தொழிலாளர்களை பகடைக்காய்களாக வைத்து தமது சுயநலத்திற்குப் பாவித்து வருகிறார்கள். அதனால் இவர்களை இன்னமும் நம்பிக் கொண்டு இருக்கலாகாது.

தமிழருக்கு என தனியான தமிழ் தொழிற்சங்கத்தில் யாவரும் அணிதிரண்டு உரிமைக்காகப் போராட வேண்டும். எமது ஒற்றுமையால் எதையும் வெல்ல முடியும்.

முன்பு இருந்த வகுப்புவாத அரசாங்கம் இத் தொழிற்சாலை தமிழ்ப் பகுதியில் இருப்பதால் இதை மூடிவிட முயற்சி எடுத்தது அதனால் நல்ல நிலையிலிருந்த இத் தொழிற்சாலையின் இயந்திரசாதனங்களெல்லாம் துருப்பிடிக்கத் தொடங்கின.

இந்த நிலையை நீடிக்க விடுதலைப்புலிகள் அனுமதிக்க மாட்டார்கள் ஜனாதிபதியுடனான அடுத்த சந்திப்பில் எமது மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடாத்தி ஆவன செய்வார் என்றார்.

அவர்கள் மாற்று இயக்கமான ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தைச் சேர்ந்தாலும் அவர் அவ்வியக்கத்தின் போக்கினை பிழை என்று கண்டு. மாறி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டார். மாற்று இயக்கத்தினரையும் கொள்கை ரீதியில் மாற்றி, எமது இயக்கத்தில் சேர்த்து கொண்டார். இந்த வகையில் திருஞானசேகரம் முக்கிய இடம் பெறுகின்றார். ஆசிரியர் திருஞானசேகரன் ஒரு தேசபக்தனாகவும், ஒரு சிறந்த எழுத்தாளனாகவும், சிறந்த ஆசிரியனாகவும் விளங்கினார் என்று குறிப்பிட்டார்.

## தமிழ்க்குழு ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைதிப் படைஎன்ற பெயரில் இந்திய இராணுவம்இலங்கைக்கு வந்தபோது பாதுகாப்புடன் கூட்டிவந்த குழுக்களைச் சேர்ந்தவர்கள் இந்தியப்படை விலகிச் சென்ற போது அவர்களுக்கு முன்பாகவே கப்பல்களில் அகதிகளாகத் தமிழ் நாட்டுக்குச் சென்ற சமயம் அவர்களை அங்கு ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

இதன் பின் இந்த அகதிகளை ஏற்றிவந்த கப்பல்கள் ஆந்திராவுக்குச் சென்றபோது ஆந்திர மாநில அரசும் அவர்களை ஏற்க மறுத்து விட்டது. இதன்பின் ஆந்திராவிலிருந்து ஒரிஸாவுக்கு இரண்டு மாதங்கள் மட்டுமே தங்குவற்கு அனுமதிபெற்று அனுப்பிவைக்கப்பட்டனர் ஒரிஸாவிலும் இந்த ஈதிககளுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. தகுந்த பாதுகாப்புடன் அவர்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றனர். இந்நிலையில் தான் தங்களை கேரளத்திலாவது தங்குவதற்கு இடம் கேட்டனர் அதையும் இப்போது நாயனார் மறுத்து விட்டானர்.

அலுவலகத்தில் தவறாது சகமுமளிக்கும்படி வேண்டுகிறோம்.

"நிதர்சனம்"
234, இராமநாதன் வீதி
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். B/753

**வீடியோ உரிமையாளர்களுக்கு**

யாழ். மாவட்டத்திலுள்ளசகல வீடியோ சென்ரர் உரிமையாளர்களையும் தொலைக்காட்சி ஒளிபரப்பாளர்களையும் 1990 - 04 - 11 (புதன்கிழமை) காலை 11 மணிக்கு "நிதர்சனம்" தலைமை அலுவலகத்தில் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகிறோம்

"நிதர்சனம்"
234, இராமநாதன் வீதி
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். B/754

உ
சிவமயம்
**மகா கும்பாபிஷேகம்**

மெய்யடியார்களே !

யாழ். நாயன்மார்கட்டு இராமநாதன் வீதி, அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6-5-90 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 10 மணி வரையும் சுபமுகூர்த்தத்தில் நடைபெறும். கும்பாபிஷேகக் கிரியைகள் டாக்டர் ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் நாயன்மார்கட்டு ஆதிபைரவர் தேவஸ்தானம், நாயன்மார்கட்டு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் (பொறுப்பாளரும் தர்மகர்த்தாவும்) கொழும்பு ஹிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் சிவாச்சாரியார் சிவாச்சாரிய குலபூஷணம் சாம் மணிக்குருக்கள் கும்பாபிஷேகத்தை நடத்துவார். (R-99)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது